விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 19 வியாழக்கிழமை (02.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை

# இந்தியாவும் ஆதரவு அளிக்குமா?



## சந்தேகம் தீர்க்க டில்லி சென்றார் கோத்தபாய

**(கொழும்பு), ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மேற்கத்தேய நாடுகள் கொண்டுவரவுள்ள தீர்மானத்துக்கு இந்தியாவும் ஆதரவளிக்கலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புதுடில்லி சென்றுள்ளார்.**

இந்தியா – இலங்கை இடையில் ஆண்டுதோறும் நடைபெறும் பாதுகாப்பு கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகியது. இதில் கடலோரப் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் இந்து சமுத்திரத்தில் அனைத்துலக ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் பங்கேற்பதற்காகவே படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழு புதுடில்லி சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஜெனிவா மாநாடு தொடர்பாகவும் இந்த விஜயத்தின் போது முக்கியமாக ஆராயப்படும் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இந்தியப் பாதுகாப்பு செயலாளர் சசிகாந்த் சர்மா தலைமையிலான குழுவினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்ப் பயிற்சியில் இலங்கை கடற்படை

அந்தமான் நிகோபார் கடற்பகுதியில் இலங்கைக் கடற்படையினர் உள்ளிட்ட 14 நாடுகள் கலந்துகொள்ளும் பாரிய கடற்போர்ப் பயிற்சி நேற்று ஆரம்பமாகியது.

இந்தியாவின் ஏற்பாட்டில் 'மிலன்' என்ற பெயரில் இடம்பெறும் கடற்போர்ப் பயிற்சியில் 14 நாடுகள் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடற்போர்ப் பயிற்சி எதிர்வரும் 06 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

1995 ஆம் ஆண்டு நான்கு நாடுகளுடன் இணைந்து 'மிலன்' என்ற பெயரில் இப் போர்ப் பயிற்சி (20ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரதப் பாதை அமைக்கப்படுகிறது 2013-ம் ஆண்டு யாழில் புகையிரத சேவை

### இந்திய துணைத் தூதர் மகாலிங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பளையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப்பாதை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2013 ஆம் ஆண்டு புகையிரதப் போக்குவரத்து இடம்பெறும் என யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

பலாலி வீதியிலுள்ள யாழ். இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இலங்கையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வட மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்பு பெருமளவான நிதியொதுக்கீட்டில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் பளையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பாதை அமைக்கும் பணி தற்போது (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுகால்மடத்தில் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கனரக வாகனம், மோட்டார் சைக்கிள், மிதிவண்டி என்பன நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தடியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்துச் சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை தில்லைமணி (வயது 52), ஆறுகால்மடம் தாமரை வீதியைச் சேர்ந்த பொன்னையா சிங்கராசா (வயது 60) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (ந-4)

## முன்னாள் போராளிகள் 24 பேரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு!

வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின்போது கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி இயக்க உறுப்பினர்கள் 24 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த 24 பேரும் தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின் பின் அகதி முகாமில் இருந்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக நீதிமன்றிற்கு அறிக்கை ஒன்றை, சமர்ப்பித்த இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டதாகவும் தடுப்புக் காவல் நிறைவடைந்துள்ளதால் (20ஆம் பக்கம் பார்க்க)

வடக்கிற்கான புகையிரத சேவையை ஆரம்பிக்கும் முகமாக வவுனியா ஓமந்தை புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் சுமார் 138 கிலோமீற்றர் வரையிலான புகையிர பாதையில் உள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம்.

இதில் சுமார் 63 கிலோமீற்றர் தூரம் வரையில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தியாகியுள்ளது.



## வயது 21-க்கு சிகரெட் விற்பனை அகப்பட்டனர் யாழ்.வர்த்தகர்கள்

(யாழ்ப்பாணம்)

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 13 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வுள்ளதாக யாழ்ப்பாணம் மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

நாவலர் வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களிலும் நல்லூர் கொக்குவில் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களிலும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போதே 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தது தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு எதிராக இன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ந-6)

## விடுதலைப் புலிகளின் கட்சிப் பதிவை தேர்தல் திணைக்களம் ரத்து செய்தது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ), தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஸ்தாபிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மற்றும் ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எப்.) ஆகிய கட்சிகளின் பதிவுகளை தேர்தல் திணைக்களம் நேற்று புதன்கிழமை ரத்து செய்துள்ளது.

பதிவினை பாதுகாப்பதற்காக வருடாந்தம் பேணப்படவேண்டிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினாலேயே தேர்தல் ஆணையாளர் குறித்த கட்சிகளின் பதிவினை நிராகரித்துள்ளார்.

புதிய சட்டத்துக்கு இணங்க அனைத்து அரசியல் கட்சிகளும் வருடாந்த கணக்கறிக்கையினை தேர்தல் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி 1989ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் மின்சார சபைக்கு நேற்று முன்தினம் மட்டும் ரூ.22 லட்சம்

### சட்டவிரோத மின்பாவனையாளர் செலுத்தினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை அதிகாரிகள் யாழ்.மாவட்டத்தில் மேற்கொண்டுவரும் அதிரடி சோதனையால் நேற்றுமுன்தினம் மட்டும் 22 லட்சத்து 74 ஆயிரத்து 958 ரூபாய் யாழ்ப்பாண மின்சார சபைக்கு நட்டஈடாகக் கிடைத்துள்ளது.

இத்தொகையை சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்ற 27 பேர் செலுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மின்சார சபை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின்போது சட்டவிரோத மின்சாரம் பெற்ற, 27பேர் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தரவிரும்பாத அதிகாரத்தை பேசி அரசாங்கம் காலம் கடத்துகிறது

## மனோ கணேசன் குற்றச்சாட்டு



13ஆம் திருத்தத்தின் கீழ் இருப்பதைகூட தராமல் கடும் போக்கில் இருக்கின்ற இந்த அரசாங்கம், தான் ஒரு போதும் தர விரும்பாத 13 ஆம் திருத்தத்திற்கு அப்பால் என்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்து காலத்தை ஓட்டுகிறது. கிருஸ்ணாவுடன் 13 ஆம் திருத்தத்திற்கு அப்பால் தீர்வு என்பதற்கு உடன்படவில்லை என்று ஜனாதிபதி இப்போது சொல்கிறார்.

அப்படியானால் இந்திய வெளிவிவகார அமைச்சர் நாடு திரும்பும் முன் சொல்லிச் சென்றது பொய்யா? இன்று மீண்டும் சர்வ கட்சிக் கதையை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

அப்படியானால் மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பிப் போக வேண்டுமா? இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியும்?

வண.மதுலுவாவே சோபித்த தேரர் தலைமையில் கொழும்பு ஜயவர்த்தன நிலையத்தில் நடைபெற்ற சமூக நீதிக்கான தேசிய இயக்கக் கூட்டத்தில் சிங்கள மொழியில் உரையாற்றிய ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

ஐ.தே.க. எம்.பி கருஜயசூரிய, பல்கலைக்கழகப் பேராசிரியர் சங்கப் பேச்சாளர் கலாநிதி மாயின் மென்டிஸ் ஆகியோர் உட்பட பெருந்தொகையான சிங்கள புத்திஜீவிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் தொடர்ந்து சிங்கள மொழியில் உரையாற்றிய மனோகணேசன் மேலும் கூறியதாவது,

என்னைப்பேச அழைத்தவர் தேசிய ஒற்றுமை பற்றி மனோ கணேசன் பேசுவார் என சொன்னார்.

இந்த அறிமுகம் எனக்குக் கூறப்பட்ட ஆலோசனையா அல்லது நிபந்தனையா எனத்தெரியவில்லை. நான் பிரிபடாத இலங்கை என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டவன். ஆனால் பிரிபடாத இலங்கையில் அதிகாரம் பிரிக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதி கொண்டவன். இதை இந்த சபை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களிலும் இயங்கும் அரைகுறை மாகாண சபைகூட வடமாகாணத்தில் இல்லை. இதற்குக் காரணம் இந்த அரசாங்கம் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பவில்லை. தேர்தல் நடத்தினால் கூட்டமைப்பு அங்கு ஆட்சியை கைப்பற்றிவிடும் என அரசாங்கத்துக்கு பயம். தனது ஆளும் கூட்டணிக்கு வெளியே எந்தவொரு கட்சியும் நாட்டில் அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பது தான் இவர்களது ஜனநாயகம்.

ஜனாதிபதியும் தாங்களே. மத்திய அரசாங்கமும் தாங்களே இவை போதாது நாட்டில் உள்ள 9 மாகாண சபைகளும் அனைத்து மாநகர, நகர, பிரதேச சபைகளும் தங்கள் கட்டுப்பாட்டில் மாத்திரம் இருக்க வேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தின் ஒரே கொள்கை.

மாகாண சபை முறைமை இறுதித்தீர்வு என நான் சொல்லவில்லை. அதை சம்மந்தப்பட்ட தரப்பினர் பேசி முடிக்க வேண்டும். ஆனால் ஏனைய 8 மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள மாகாண சபை ஏன் வடக்குக்கு மட்டும் இல்லை என நான் கேட்கிறேன். இப்படி நான் கோரிக்கை விடுப்பதை பார்த்து அரசாங்க ஊடகம் ஒன்று மனோ கணேசன் கூட்டமைப்பைப் பிடித்து வடமாகாண சபை முதலமைச்சராகத் திட்டம் போடுகிறார் எனக் கடந்த வாரம் எழுதியுள்ளது.

இதைவிட நகைச்சுவை ஒன்றுமில்லை. எனக்கு கூட்டமைப்பும் வேண்டாம். முதல் அமைச்சர் பதவியும் வேண்டாம். பதவியிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் நான்தான் கொழும்பின் முதல் அமைச்சர்.

வடமாகாண உடன்பிறப்புக்கள் படும் சொல்லொணாதுன்பம் தீர வேண்டும். அதன் மூலம் நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் அமைதி ஏற்பட வேண்டும். இது ஒன்று மட்டுமே என் ஒரே எதிர்பார்ப்பு. ஜனாதிபதி தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவிடம் 13ஆம் திருத்தத்துக்கு அப்பால் என்ற திட்டத்தைப் பற்றி பேசினேனே தவிர அதற்கு தான் உடன்படவில்லை என்று சொல்லி முடித்துவிட்டார். அத்துடன் அனைத்துக்கட்சி கூட்டம் கூட்டப் போவதாக சொல்கிறார்.

அதாவது மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே செல்வோம் எனக் கூறுகிறார். அத்துடன் கூட்டமைப்புத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளாமல் அடம் பிடிக்கிறது என்ற புகார் வேறு சொல்லப்படுகிறது. இத்தகைய எந்தவோர் அடிப்படையும் இல்லாத சூழல் பின்னணியில் கூட்டமைப்பு எங்கே எப்போது எப்படி தெரிவுக் குழுவிலோ அனைத்துக்கட்சிக் கூட்டத்திலோ கலந்து கொள்ள முடியும் என எங்களுக்கு விளங்கவில்லை.

பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் பற்றி தென்னிலங்கையில் உரக்கப் பேசி சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கம் இன்று பீதியை கிளப்பி விட்டிருக்கிறது. மறுபக்கத்தில் இப்போது இருக்கும் மாகாண சபையைக் கூட வடக்கில் நடத்துவதற்கு இடம் தராமல் வடமாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்துள்ளது.

வழமைபோல் சிங்களமக்கள் மத்தியில் இனவாதத்தை கிளப்பி, புலிப் பூச்சாண்டியைக் காட்டி தமது ஆட்சியை தொடர்ந்துகொண்டுசெல்வது ஒன்று மட்டுமே இவர்களின் நோக்கம்.

இவை ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் செய்யும் வேலைகள் இல்லை என்பதை சிங்கள புத்திஜீவிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார். (ந-11)


### தவறிவிட்டது

இராசதுரை நிரேகா (Nereka) என்பவருடைய தேசிய அடையாள அட்டை(இல. 895322598V) வட்டக்கச்சிக்கும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகட்கு: 077 9982948
077 2008145

(C-5754)



### விற்பனையாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் வியாபார புடைவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.
[ஆண், பெண் இருபாலாரும்]

தொடர்பு:-
072 9568282

(சு-5751)



### EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)



### வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION


பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-8884777/011-7902838/
011-4343339


## பொன்சேகாவின் மேன் முறையீட்டு மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா முதலாவது நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த ஆட்சேபத்தை ஏற்றுக் கொள்ளாமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு நேற்று விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்பட்டுள்ளது.



மேன்முறையீட்டு நீதிபதிகளான எல்.ரஞ்சித் சில்வா மீற்றும் எச்.என்.ஜே.பெரேரா ஆகியோர் முன்னிலையில் இந்த மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்குச் சமமான மற்றுமொரு வழக்குத் தொடர்பில் சரத்பொன்சேகா உயர் நீதிமன்றத்தில் விடயங்களை சமர்ப்பித்துள்ளதாக அவர் சார்பாக நீதிமன்றத்தில் சமூகமளித்த வழக்கறிஞர் ஷானகே குரே நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது அதில் தெரிவிக்கப்படும் விடயங்கள் முக்கியமானவை என்பதால், மேல்முறையீட்டு மனு விசாரணையை ஒத்திவைக்குமாறு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கோரிக்கை, விடுத்தார்.

இதற்குப் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபம் தெரிவிக்காத காரணத்தால் இவ்வழக்கு விசாரணை மே மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந)


### விற்பனை முகவர்கள் தேவை

பிரபல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.

விபரங்களுக்கு :-
0782722915, 0710110722
(7422)



### Vision Bus Booking Centre

AC
Non AC
Normal
ஆசனங்கள்
இல. 112, தபாற் பெட்டி சந்தி,
திருநெல்வேலி.

- யாழ் - கொழும்பு பிரயாண பதிவுகளை வீட்டில் இருந்தவாறே மேற்கொள்ளலாம்.
- எமது திருநெல்வேலி தரிப்பிடத்தில் இருந்தும் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.
- கொழும்பு செல்லும் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விசேட கட்டண கழிவு.

HOT LINE - 0779210136
(7412)


## ஓடிக்கொண்டிருந்த வானின் கதவு திறந்தது சிறுமி வீதியில் விழுந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஓடிக் கொண்டிருந்த வாகனத்தின் கதவு தவறுதலாக திறபட்டதனால் வாகனத்திலிருந்த சிறுமி வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

தாவடி தெற்கு கொக்குவில் காளி கோவிலடியைச் சேர்ந்த ஜீவானந்தம் லோஜினி (வயது 4) என்ற சிறுமியே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருமணச் சடங்கொன்றுக்குச் செல்வதற்காக ஹயஸ் வானில் சென்ற பிரஸ்தாப சிறுமி யாழ். முத்திரைச் சந்திப் பகுதியில் வைத்து வானின் கதவைத் தவறுதலாகத் திறந்த போது இந்த விபத்து நடந்துள்ளது. (ந-4)

## மீசாலைப் பெண் கொலை வழக்கு சந்தேக நபர்களின் பிணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து நாடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் வேறு நபர்களுடன் சேர்ந்து தனது மனைவியை கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு பிணைப் பத்திரங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

கடந்தவருடம் மார்ச் மாதம் 6 ஆம் திகதி மீசாலையில் வைத்து குகதாஸ் சாந்தினி என்ற பெண் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று சந்தேக நபர்களில் இருவரின் சார்பில் இந்த விண்ணப்பங்கள் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டன.

இந்தக் கொலை தொடர்பில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் 5 சந்தேக நபர்கள் கொலை நிகழ்ந்த மறுநாள் தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

ஐவரில் இளம்பெண் ஒருவர் உட்பட இருவருக்கு யாழ்.மேல் நீதிமன்று ஏற்கெனவே பிணை அனுமதி வழங்க உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் ஏனைய சந்தேக நபர்களில் கொலையுண்டவரின் கணவர் தவிர மற்றைய இருவர் சார்பிலும் பிணைகோரும் விண்ணப்பங்கள் யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன் போது அரச சட்டவாதி வி.திருக்குமரன் கடும் ஆட்சேபனை தெரிவித்தார். இந்தக் கொலை வழக்கில் சாவகச்சேரி நீதிமன்றில் பூர்வாங்க விசாரணை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என தெரிவித்த அரச சட்டவாதி, கொலையுண்டவரினதும் அவரது கணவரான முதலாம் சந்தேக நபரினதும் மகனான 14 வயதுடைய சிறுவன் முக்கிய சாட்சியாக சாட்சிய மளிக்கவுள்ளார்.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் பிணையில் விடப்பட்டால் அவர்கள் சாட்சிகளில் தலையீடு செய்யக் கூடிய வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக பிணை விண்ணப்பங்களை ஆதரித்து வாதாடிய சட்டத்தரணி என் ஸ்ரீகாந்தா சம்மந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் அல்ல என்று தெரிவித்திருந்தார்.

இரு தரப்பு சமர்ப்பிப்புகளின் பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதி பிணை மனுக்கள் இரண்டையும் மார்ஜ் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ந-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நவரட்ணராஜா மைதானத்தில் பாடசாலை அதிபர் கே.ஆர்.ராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா சிறப்பு விருந்தினராக யாழ்.வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-7)

# இன்று ஒரு தகவல்

## அசலும் நகலும்!

ஓர் ஊரிலே ஒரு செல்வந்தர் இருந்தார். உலகத்திலே உள்ள புகழ்பெற்ற ஓவியங்களையெல்லாம் வாங்கி சேகரிப்பது அவர் வழக்கம்.

எல்லாமே அசல் ஓவியங்களாகத்தான் பார்த்து அவர் வாங்குவார். நகலான ஓவியங்களை அவர் வாங்குவதில்லை.

ஓவியரே கைப்படத் தீட்டியதாக அது இருக்க வேண்டும். விலையைப்பற்றி எதுவுமே கவலைப்படமாட்டார்.

எவ்வளவு பணமென்றாலும் அதைக் கொடுத்து வாங்கிக் கொள்வார்.

அவர் ஒரு சமயம் பிக்காசோ வரைந்த ஓவியத்தை பத்து இலட்சம் கொடுத்து வாங்கினார்.

வாங்கிய பின்னர் அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது. இது அசல் ஓவியம் தானா? அல்லது அதன்பின் எடுத்த நகலாக இது இருக்குமா? ஒருவேளை இது நகலாக இருந்தால் கொடுத்த பத்து இலட்சமும் பறந்து விடுமோ இப்படியாக பல யோசனை.

சரி... இதை எப்படித் தெளிவுபடுத்துவது? அவர் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

அந்த ஊரிலே ஒரு புகழ்பெற்ற ஓவிய விமர்சகர் இருந்தார். அவருக்கு ஓவியம் தொடர்பான எல்லா விபரங்களும் தெரியும். அவரிடம் சென்று ஓவியத்தைக் காட்டினார்.

"இது அசல்தானா என்பதை சற்றுப் பார்த்து சொல்லுங்கள். ஏனென்றால், பத்தாயிரம் டொலர் கொடுத்து இதை வாங்கினேன்" என்றார்.

அந்த ஓவிய விமர்சகர் இவர் காட்டிய ஓவியத்தை கவனித்துப் பார்த்தார்.

"அதன்பின் சொன்னார்... இது பிக்காசோ வரைந்த அசல் ஓவியம்தான்!" என்றார்.

இருந்தாலும் இவருக்கு இன்னமும் சந்தேகமாகத்தான் இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள். உறுதியாகத்தான் சொல்கிறீர்களா?" என்றார்.

"உறுதியாகத்தான் சொல்கிறேன்" என்றார்.

"இருந்தாலும்... நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்..."

"என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

"உங்களுக்குப் பிக்காசோவைத் தெரியும் இல்லையா?"

"நல்லாத் தெரியும்... அவர் எனக்கு நண்பர்தான்!"

"அதனாலே என்னையும் சற்று அவரிடம் அழைத்துக்கொண்டு சென்றால்... இதை நான் அவரிடம் காட்டி... இது நீங்கள் வரைந்த அசல் ஓவியம்தானா?" என்று கேட்டுக்கொள்ளலாம்.

"இதோ... பாருங்கள்... இந்த ஓவியத்தை பிக்காசோ வரைந்து கொண்டிருந்த சமயத்திலே நானும் அருகில் இருந்தேன். இருந்தாலும் இப்போதே உங்களை அவரிடம் அழைத்துக்கொண்டு போகிறேன்..." என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு சென்றார்.

இரண்டு பேரும் பிக்காசோவிடம் சென்றார்கள். ஓவியத்தைக் காட்டினார்கள்.

"இது அசல்தானா?" என்று கேட்டார்.

"இது அசல் இல்லை... நகல்" என்றார் அவர்.

விமர்சகருக்கு அதிர்ச்சி. அவருக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. இந்த ஓவியத்தை வரையும்போது தான் கூடவே இருந்தது.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள். நீங்கள் இதை வரையும் போது நான் உங்கள் பக்கத்தில்தான் இருந்தேன்"

இதேவேளை, ஓவிய கூடத்திலே இருந்த ஒரு பெண்மணி வந்தார்.

"ஏன்... இப்படிப்பொய் சொல்கிறீர்கள்... இதைத் தீட்டும்போது நான்கூட உங்கள் பக்கத்திலே இருந்து பார்த்துக் கொண்டு தானே இருந்தேன்!"

"ஆமாம்... பார்த்துக் கொண்டுதான் இருந்தீர்கள்"

"சரி. இந்த ஓவியத்தை நீங்கள் வரையவில்லையா?"

"யார்...சொன்னது அப்படி... இந்த ஓவியம் நான் என் கைப்பட வரைந்தது தான். ஆனாலும், இது அசல் அல்ல!"

இதைக் கேட்டதும் அங்கே இருந்த மூன்று பேரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்... எங்களுக்குப் புரியவில்லை"

பிக்காசோ விபரமாகச் சொன்னார்.

"இதே ஓவியத்தை ஏற்கனவே நான் வரைந்துள்ளேன்"

ஒரு சமயம் ஒருத்தர் வந்தார். அவசரமாக ஒரு ஓவியம் வரைந்து தரும்படியாகக் கேட்டார்.

அப்போது எனக்குப் புதிதாக யோசனை எதுவும் தோன்றவில்லை.

சரியென்று பழைய யோசனை ஒன்றையே மறுபடியும் வரைந்து அவரிடம் கொடுத்துவிட்டேன்.

அதுதான் பல கைமாறி இப்போது இவரிடம் வந்து சேர்ந்துள்ளது. முதல்தடவையாக வரைந்தேனே... அந்த நிஜயமான அசல் ஓவியம் இன்னமும் இருக்கிறது.

"அது பாரீசிலே உள்ள கலைக்கூடத்திலே இருக்கிறது. இந்த ஓவியம் நானே வரைந்த ஒரு நல்ல ஓவியம்தான்!"

"இருந்தாலும் நீங்கள் கைப்பட வரைந்தது தானே?"

"உண்மைதான்... ஆனாலும் இதை அசல் என்று கூறமுடியாது. அந்த அசலைப் பார்த்து நானே எடுத்த நகல் இது"

"வேறு ஒருவர்கூட இப்படிப் பிரதி எடுத்திருக்க முடியும். எப்படியிருந்தாலும் அது நகல்தான். அசல் அல்ல" என்றார் பிக்காசோ.

வாழ்க்கையிலே அசல் என்பது ஒன்றுதான் இருக்கமுடியும்.

"அசலைப் போலவே இன்னொரு 'அசல்' இருக்க முடியாது"

"நீ நீயாகத்தான் இருந்தாக வேண்டும் என்பது பெரியவர்கள் அறிவுரை"

புத்தரைப்போல புத்தர் தான் இருக்க முடியும்.

காந்தியைப் போல காந்திதான் இருக்க முடியும்.

"என்னைப் போல நான் ஒருவன் மட்டுமே இருக்க முடியும். இந்த உலகத்தில் நான்தான் அசல் என்ற எண்ணம் வரவேண்டும்"

"நான் இன்னொருவரின் நகலாக இருக்கவே முடியாது" என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்: புத்தரைப் போல ஆவது சாத்தியம்; புத்தராவது சாத்தியமில்லை.

எனவே, நாம் நம்முடைய தனித்தன்மையைப் புரிந்து கொண்டு வாழ்க்கையிலே வெற்றி நடை போடுவோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.விஞ்ஞான சங்கத்தின் கண்காட்சி போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண, வன்னி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விஞ்ஞான போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

இக் கண்காட்சிப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்.மாவட்டத்திற்கு மத்திய கல்லூரியிலும் ஏனைய மாவட்டங்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது என விஞ்ஞான சங்க உதவிப் பொதுச் செயலாளர் டாக்டர் ப.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் கண்காட்சிப் பொருள், சுவரொட்டி, சித்திரம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இதில் யாழ்.மற்றும் வன்னியிலுள்ள (துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு) க.பொ.த.உயர்தரத்தில் கற்கும் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றலாம். ஒரு பாடசாலையில் இருந்து எத்தனை குழுக்களும் பங்குபற்றலாம். ஒரு குழுவின் காட்சிப்படுத்தலுக்கு ஆகக்கூடியது மூன்று மாணவர்கள் மட்டுமே உரிமை கோர முடியும்.

இக் காட்சிப்படுத்தலுக்கான ஆக்கங்கள் விஞ்ஞானம் சார்ந்த புத்தாக்கமாக இருத்தல் வேண்டும். அத்துடன் காலநிலை மாற்றம் என்ற கருப்பொருளுக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைய வேண்டும். மேலும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சக்திவள மேம்பாடு மற்றும் கழிவுப் பொருள் மீள்சுழற்சி என்பனவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

சுவரொட்டி, சித்திரம் என்பன பிறிசில் பலகை (Bristol Board) ஒன்றின் பரிணாம அளவில் தயாரிக்கப்பட்ல் வேண்டும்.

இதற்கமைய சுவரொட்டி முன்கூட்டியே மாணவரால் தயாரிக்கப்பட்டு கண்காட்சி தினத்தன்று காட்சிப்படுத்தலாம். அத்துடன் தாம் முன்வைக்க விரும்பும் கருப்பொருளை படங்கள், வர்ணங்கள், ஒட்டுத்துண்டுகள், வசனங்கள் முதலானவற்றை கொண்டு வெளிப்படுத்தலாம்.

சித்திரப் போட்டியில் பங்கு பற்றும் மாணவர்கள் போட்டித் தினத்தன்று வழங்கப்படும் வெள்ளைத்தாளில் சொந்த வர்ணக் கலவையைப் பயன்படுத்தி தாம் நினைக்கும் கருப்பொருளை குறிக்கப்பட்ட கால அளவினுள் சித்திரமாக வரைதல் வேண்டும். சித்திரம் வரைதல் குழுவாகஅல்லதுதனியொருவரினால் ஆற்றுகைப் படுத்தப்பட வேண்டும்.

இதற்கு வகுப்பாசிரியர்களின் அல்லது பொறுப்பாசிரியர்களின் உதவி போட்டி நேரத்தின் போது அனுமதிக்கப்படமாட்டாது.

மேலும் இவ்வாக்கங்கள் யாவும் குறைந்த செலவிலும் இலகுவில் இடம் மாற்றக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இரு பிரிவுப் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும். சுவரொட்டி, சித்திரப் போட்டிகள் என்பன நடைபெறும் இடத்திலேயே முடிவுகள் அறிவிக்கப்படும்.

அத்துடன் இப்போட்டிகளின் காட்சிப் பொருட்கள் தொடர்பான எவ்வித செலவுகளையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பொறுப்பேற்காது எனவும் சங்கம் அறிவித்துள்ளது. (அ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 90 |
| தக்காளி | 40 | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 25 | 25 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 50 | 40 | 50 |
| பூசணி | 30-35 | 30 | 30 |
| புடோல் | 30 | 60 | 45 |
| வாழைக்காய் | 30-35 | 30 | 35 |
| சின்ன வெங்காயம் | 50 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 55 |
| பாகற்காய் | 50 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 60 | 90 | 130 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | -- | 60 | 70 |
| கறிமிளகாய் | -- | 120 | 170 |
| முருங்கைக்காய் | -- | 350 | 320 |
| போஞ்சி | 20 | 30 | 40 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 5 | 20 | 15 |
| தேசிக்காய் | 35 | 60 | 45 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 | 25 |
| வெங்காயப்பூ | 110 | 120 | -- |

# இராசி பலன்

02.02.2012

(தை 19,வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

தசமி பின்னிரவு 2.42 மணிவரை

கார்த்திகை காலை 8.20 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்,போசன சுகமுண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்,நண்பர்கள் சந்திப்புண்டு,உடல் நலம் சீராகும்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது,இடமாற்றம், ஊர் மாற்றங்கள் என்பன இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், பயணங்களால் பலனுண்டு,கௌரவம் கூடும் நாள்,வருமானங்கள் திருப்தி தரும்.

**சிங்கம்** அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** பயணங்களால் அனுகூலமுண்டு,தந்தை வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்,தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், செலவுக்கேற்ப பணவரவு கிடைக்கும்.

**துலாம்** கௌரவக்குறைவான நாள்,தேவையற்ற சில சம்பவங்களால் மன அமைதி குறையலாம்,போசன சுகமுண்டு, விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் கைகூடும், களஸ்திர நன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்,சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** ஆரோக்கியமான நாள்,ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும், உதிரி வருமானங்கள் வந்து சேரும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் வளர்ச்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும்,உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு,பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.

வளவன்

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் வகை 1C பாடசாலை, யா/குட்டியப்புலம் அ.த.க வகை II பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதில் வகை 1C பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம்I, 2-Iஐச் சேர்ந்த பட்டதாரிகளிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, 2-I பட்டதாரிகளிடமிருந்தும், 2-II பயிற்றப்பட்ட பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-I, 2-II பட்டதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.இவ் அதிபர் பதவிகளுக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் உரிய முறைப்படி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்


(சாவகச்சேரி)

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் புதிய சுற்றறிக்கை கிடைத்ததும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் க.புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர்ப்பொதுச்சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் நகரசபையின் உறுப்பினர்களுக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து அண்மையில் நடைபெற்ற நகரசபைக்கூட்டத்தில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டதைத் தொடர்ந்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது (அ-3-29)





யாழ். மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் திருமதி லீலாவதி அருளையா மங்கல விளக்கேற்றுவதையும் தரம் ஒன்று மாணவர்களை தரம் இரண்டு மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின்)

# திண்மக்கழிவு அகற்றல்

(யாழ்ப்பாணம்)

திண்மக்கழிவு முகாமைத்துவத்தின்கீழ் எமது பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள கழிவுகள் சேகரிக்கும் தொட்டிகள் உக்கமுடியாத கழிவுகளை போடுவதற்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் மேற்படி தொட்டிகளில் சகல கழிவுப் பொருட்களும் போடப்படுகின்றன.

எனவே உக்கமுடியாத கழிவுகளை மட்டும் போடுமாறும் உக்கக்கூடிய கழிவுகளை தமது வீடுகளிலேயே புதைக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இவ்விதிமுறையை மீறுபவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர் பிரதேசசபை தவிசாளர் ப.வசந்தகுமார் அறிவித்துள்ளார். (அ)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நடத்தப்படும் ஜே/62 கிராமசேவையாளர் பிரிவு மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு ஜே/62, கொழும்புத்துறை மேற்கு, சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுள்ளார். (அ)

# முறைசாரா கல்விப் பிரிவின் சிங்கள மொழி வகுப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் சிங்கள மொழி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வகுப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் கல்லூரி அதிபரிடம் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-10)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ் நிலைய ஸ்ரீ ஞான வைரவ சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-7)

# பட்டதாரிகளை அரசாங்க சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஆளுநரும் அமைச்சரும் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு முன்பாக சந்தித்து கலந்துரையாடியதோடு தமக்கான நியமனம் வலியுறுத்தி மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் வளாகத்தினுள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஒன்று கூடிய யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் பேரணியாக சென்று அமைச்சர் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்று கூடினர்.

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்த சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் உறுதியளித்தனர்.

இதில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பட்டம் பெற்றவர்களை உடனடியாக அரச சேவையில் இணைத்துக் கொள்வதாக ஆளுநர் சந்திரசிறி தெரிவித்தார். (அ-6)

# இரவுவேளையில் நடமாடிய நபர்கள் கைதாகினர்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் இன்பசிட்டி, சக்கோட்டை, கரையோரப் பகுதிகளில் இரவு நேரங்களில் தேவையற்ற முறையில் நடமாடுவோர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மேற்குறித்த கரையோரப் பகுதியில் இரவில் அதிகளவான பொலிஸார் நடமாடி வருகின்றனர். இரவில் வீதியோரங்களில் உறங்குவோர், பஸ் தரிப்பு நிலையங்களில் தங்கியிருப்போர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சக்கோட்டைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பொலிஸாரின் நடமாட்டம் காணப்படுகிறது. (அ-3-10)




# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு திருவருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வுக்கான கிரியைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இதில் நாளை மறுதினம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.(அ-7-84)

(யாழ்ப்பாணம்)

புலோலி தெற்கு திருவருள்மிகு மந்திகை கண்ணகை அம்மன் கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 மணி முதல் 8.23 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 7 மணி முதல் மாலை 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வுக்கு ஆசியுரையினை தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ தி.சோமஸ்கந்தராஜக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகளும் வழங்கியுள்ளனர். (அ-7)

# கற்கை நெறிக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட தேவைகள் சார் கல்வித்துறையினால் கற்றல் இயலாமையுடைய சிறாரைக் கற்பித்தல் தொடர்பான குறுங்கால சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இக்கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 8 ஆம்திகதி புதன்கிழமை வரை பிராந்திய நிலையத்தில் வழங்கப்படவுள்ளது எனவும் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து வழங்குமாறும் கோரியுள்ளது. (அ-7)

# மக்களின் காணி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தரப்படும்

## மறிச்சுக்கட்டி மக்களுக்கு அமைச்சர் சந்திரசேனா உறுதியளிப்பு

வடக்கில் மன்னார் மறிச்சுக்கட்டு கிராமத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களது காணிப்பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைக்க எதிர்வரும் 15 ஆம் திகதி தமது அமைச்சில் உயர் மட்ட கூட்டமொன்று நடைபெறவுள்ளதாக வனபரிபாலன மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

மறிச்சுகட்டி வருகைதந்த அமைச்சர் சந்திரசேனா ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கமநலசேவை நிலையத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்த பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசலி பிரதேச செயலக பிரிவிலுள்ள மறிச்சுக்கட்டி கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்களது காணிப் பிரச்சினையினை நிரந்தரமாக தீர்த்து வைக்க தமது அமைச்சில் உயர்மட்ட கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுமாறு வனபரிபாலன மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனா, அமைச்சின் மேலதிக செயலாளர் எம். முகைதீனுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இம் மக்கள் தங்களால் போடப்பட்டிருந்த குடிசைகளை வன பரிபாலன அதிகாரிகள் அகற்றியுள்ளதாகவும் இந்த நிலை தொடருமெனில் மீண்டும் நாங்கள் இங்கிருந்து அகதிகளாக வெளியேற வேண் டிய நிலை ஏற்படும் என்றும் எடுத் துரைத்தனர்.

முஸ்லிம்கள் வாழ்ந்த அடையாளங்கள் இங்கு இருப்பதாக மேலும் கூறிய மக்கள் தமக்கு நிரந்தரமானதொரு தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தனர்.

இவற்றை கேட்டறிந்து கொண்ட அமைச்சர் சந்திரசேனா மீள் குடியமறிய இம்மக்களுக்கு ஒருபோதும் அநீதி இழைக்கப்படமாட்டாது என்றும் தற்காலக தீர்வைவிட நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தருவது தான் பொருத்தமெனத் தெரிவித்ததுடன் அரசாங்கத்தின் மீள் குடியேற்றத் திட்டத்திற்கமைய மக் களது மீள்குடியேற்றம் எவ்வித தங்குதடையின்றியும் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## நிர்வாகத்தெரிவு

வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்து.

தலைவராக ச.ஜெயகணேஸ், செயலாளராக சூ.ஞானசேகரம், பொருளாளராக இ.இராதாகிருஷ்ணன், உபதலைவர்களாக சி.மதுசூதனன், சூ.சே. குலநாயகம், உப செயலாளராக கி.மகாலிங்கம், கணக்காய்வாளர் கே.என். தேவதாஸ், காப்பாளர்களாக ந.அனந்தராஜ், சி.சிவபாலசிங்கம், பு.அகமணிதேவர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் நிர்வாக சபையின் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## நூல் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் 15 ஆவது ஆண்டு ஞானச்சுடர் மலர் வெளியீடு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந் நூல் வெளியீட்டுரையினை ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் ஆறுதிரமுருகனும் மதிப்பீட்டுரையினை வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (அ-7)

## பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் மக்களுக்கான வாழ்வாதார உதவிகள்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டில் யுத்தத்தினால் பாதிக்கபட்ட குடும்பங்களில் சுமார் 30 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களை சேர்ந்த தலா இரண்டு மாணவர்களுக்கு அவர்களுடைய கல்விச்செயற்பாடுகளுக்கு உதவும் முகமாக மாதாந்தம் இரண்டு சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அபிவிருத்தி பேரவையின் தலைவரும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளருமாகிய தி.அ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 30 பயிற்சியா ளர்கள் உள்ளடக்கிய இரண்டு அணிகளுக்கான தையற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் 20பேர் கொண்ட ஒரு அணிக்காக அலங்காரப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை சேர்ந்த புலம்பெயர் மக்களின் நிதிப் பங்களிப்புடன் இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)



பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பாதிகாரியாக கடமையாற்றி கடந்த மாதத்துடன் இடமாற்றம் பெற்றுச்செல்லும் மனோச் ரணகாவுக்கு பூநகரி வர்த்தக சங்கத்தின் பிரிவுபசார விழாவை நடத்தி நினைவு பரிசில் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம்:-பூநகரி செய்தியாளர்)

## இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டிய இலங்கை கடற்படை

(இராமேஸ்வரம்)

கச்சதீவு அருகே மீன்பிடிக்க சென்ற இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டி அடித்தனர். இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் 600 மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர்.

வழக்கம்போல் கச்சதீவு கடல் பகுதிக்குள் செல்ல முயன்ற மீனவர்களை நள்ளிரவில் வந்த இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தனர்.

மீன்பிடிக்க சென்ற மீனவர்களில் பலர் தடைசெய்யப்பட்ட இரட்டை மடி வலையில் மீன்பிடித்ததால் தான் இலங்கை கடற்படையினர் விரட்டியதாகவும் இதனால் போதிய மீன்பாடு இல்லை என்றும் கரை திரும்பிய ஒற்றைமடி மீனவர்கள் தெரிவித்தனர்.

மீனவ சங்க பிரதிநிதிகள் சிலர் கூறியதாவது, கடல் வளத்தை அளிக்கும் இரட்டைமடி வலையினால் மீன்பிடிக்கவும் கழிவுநீர் வழிய வாகனங்களில் மீன்களை ஏற்றிச்செல்லவும் தடை இருந்தும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அதை தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் மீன்வளம் அழிவதுடன் ஒற்றை மடி கரைவலை நாட்டுப்படகு மீனவர்களின் மீன்பிடித்தொழில் பாதிக்கப்படுகிறது என அவர்கள் தெரிவித்தனர். (அ-2)

## பாராட்டு விழா

அச்சுவேலி தெற்கு நவோதய சனசமூக நிலையத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுவுக்கான பாராட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி தெற்கு ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தில் நவோதய சனசமூக நிலையத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழு தலைவர் திருமதி சாந்தமலர் குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் ஏஏஏ மூவிஸ் தலைவர் மற்றும் கௌரவ விருந்தினர்களாக லிப்பீற் 2 கெயார் சர்வதேச பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய்றோஸ் ஞானேஸ்வரன், அச்சுவேலி இலங்கைவங்கி முகாமையாளர் ரி. புவனேந்திரன், அச்சுவேலி தெற்கு கிராமசேவையாளர் ஜே/286 பி.சாந்தரூபன், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஆசிரியர் எம்.இரங்கநாதன், நவோதய சனசமூக நிலையச் செயலாளர் திருமதி பி.சித்திரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

## திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க நீதியமைச்சு நடவடிக்கை

திடீர் மரண விசாரணை அதிகாரிகளை பயிற்றுவிப்பதற்கான செயல்முறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சில் நடைபெற்ற மேல் மாகாணத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, திடீர் மரணவிசாரணை அதிகாரிகளை பொறுத்தவரை அவர்கள் ஒரு மகத்தான பணியை ஆற்றுகின்றனர். அதனால் கிடைக்கும் வருமானத்தைவிட ஒரு சமூக சேவையாகக் கருதி இதனை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிடைக்காமல் தாமதித்தால் கூட அதனை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அவர்களுக்குரிய சமூக அந்தஸ்தை கருத்திற்கொண்டு அவர்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி உரிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளேன்.

திடீர் மரணங்கள் சம்பவிக்கும் பொழுது உடனடியாக அவை தொடர்பில் கவனம் செலுத்தி விசாரணைகளை உரியமுறையில் நடத்தி விரைவாக சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கவேண்டும். தேவையற்ற தாமதங்களை முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி ஒருவர் அப்பிரதேச நீதிபதி, பொலிஸார், சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோரோடு ஒத்துழைத்து செயற்பட வேண்டும். மரண விசாரணை அதிகாரிகளுக்கு உரிய பயிற்சிகளை சிறந்த முறையில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளு மாறு அமைச்சு அதிகாரிகளை பணித்துள்ளேன் என்றார். (அ-2)

## பரமன் கிராய் அ.த.க.வின் மெய்வல்லுநர் போட்டி

கிளி/ பரமன்ராய் அ.த.க பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் இல்ல விளையாட்டு போட்டி இன்று வியாழக்கிழம பிற்பகல் 1.30 மணி க்கு அதிபர் பி.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி வலயக் கல்வி அலுவலர் அதிகாரி எஸ்.தர்மரட்ணம், சிறப்பு விருந்தினராக கட்டளை அலுவலர் லெப்டினன்ட் கேணல் பிரவ்ரவ் தொறடெனிய, கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் வி.சிறீஸ் குமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# விமலும் சம்பிக்கவும் அரசை விட்டு விலகினால்

# இனப்பிரச்சினை தீர்வுக்கு அறிகுறியாக அமையும்

## பிரபாகணேசன் எம்.பி. கூறுகிறார்



(கொழும்பு)

அமைச்சர்களான விமல் வீரவன்சவும் சம்பிக்க ரணவக்கவும் அரசை விட்டு விலகினால் அரசாங்கம் வீழ்ச்சியடையப் போவதில்லை. இவர்கள் இருவரும் ஒருபோதும் அரசாங்கத்தை விட்டு விலகமாட்டார்கள். இவர்கள் விலகினால் அது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நல்ல அறிகுறியாக அமையும் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோர் 13 ஆவது திருத்தத்திற்குப் அப்பாற்சென்று தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க அரசு முற்படுமேயானால் அரசை விட்டு விலகுவதாக சமீப காலமாக ஊடகங்களுக்கு வழங்கும் அறிக்கை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்திற்குள்ளே இருந்து கொண்டு அதன் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு அதற்கு எதிராகவே காட்டிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த அரசியல் பிரகிருதிகள் அரசாங்கத்தை விட்டுவிலகவும் தயாராம். இந்தபிரச்சினையை முன்னிறுத்தி இவர்கள் நிச்சயமாக அரசை விட்டு வெளியேற மாட்டார்கள் என்ற சவாலை நான் விடுக்க விரும்புகின்றேன்.

இவர்கள் அப்படி அரசாங்கத்தை விட்டு வெளியேறினாலும் அரசாங்கத்திற்கு எதுவித பாதகமோ சங்கடமோ இல்லை. இவர்கள் அவ்வாறு போய் சேர்வது தேசிய இனப்பிரச்சினை தீர்ப்பதற்கு ஒரு நல்ல அறிகுறியாகவும் இருக்கும். இவர்கள் இல்லாத அரசாங்கம் ஒன்றும் தோல்வி கண்டு வீழ்ச்சியடையப் போவதில்லை.

இப்படிப்பட்டவர்களின் சிந்தனைகளை நிச்சயமாக பெரும்பான்மை மக்களும் நாட்டில் அக்கறை கொண்ட தேசாபிமானிகளும் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதே எமது கருத்தாகும். இப்படிப்பட்டவர்களும் அவர்களுடைய சிந்தனைகளும் இலங்கை அரசியலுக்கு சமகாலத்தில் கிடைத்த சாபக்கேடாகும்.

நமது நாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்கு உடனடியாகவும் அல்லது அவசரமாகவும் தீர்வு காணப்பட்டால் தான் நாடு அபிவிருத்தி பாதையில் அடியெடுத்து வைக்க முடியும் என நம்புகின்ற நல்லெண்ணம் படைத்த சகல இலங்கையர்களும் அமைச்சர்களுடைய இந்த கூற்றுக்களை கேட்டு அதிர்ச்சியடைந்து வெட்கத்தால் தலைகுனிந்து நிற்கின்றார்கள்.

நமது நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்று வாதிடுபவர்கள்தான் இவர்கள். அப்படியாயின் ஏன் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன? ஏன் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஏன் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றது? ஏன் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது என இந்த அரசியல் பிரகிருதிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினையை தணிப்பதற்கான நடவடிக்கைகளை விட்டு விட்டு அதனை சுயலாபத்திற்காக கொழுந்து விட்டெரியும் முயற்சியில் இந்த இளம் தலைவர்களை ஈடுபட வேண்டாம் என அன்புடன் வேண்டுகின்றேன். (அ-2)

# தமிழ்க் கைதிகள் பிரச்சினைக்கு

# உடன் தீர்வு காணப்பட வேண்டும்

## ஜயலத் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளை மீண்டும் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்ற சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் தேசிய சேவைச் சங்கத்தின் தலைவருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் பீதியடைந்தனர். இந்தச் சம்பவங்களுடன் தமிழ்க் கைதிகள் சம்பந்தப் பட்டிருக்கவில்லை. எனினும் அவர்களை சம்பந்தப்படுத்த அமைதியின்மை சம்பவத்துடன் தொடர்புடைய கைதிகள் தீவிர பிரயாசப்பட்டனர். அதேவேளை, மாறாக இந்தச் சம்பவத்துடன் தமிழ்க் கைதிகளும் விருப்பத்துக்கு மாறாக தொடர்புபட்டிருந்தால் அவர்கள் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு முகங்கொடுப்பார்கள் என்பது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

எனினும் இந்த தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக்காக களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர். வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 200 இற்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

உண்மையில் அவசர காரணத்தால் இந்த தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக்காக அவர்கள் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டமை வரவேற்கத்தக்கதாகும்.

எனினும் இந்த அமைதியின்மை தற்போது முழுமையாக தணிந்துவிட்டது. ஆனாலும் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகள் மீண்டும் வெலிக்கடை சிறைக்கு அழைத்து வரப்படவில்லை.

களுத்துறையிலிருந்து கொழும்பு நீதிமன்றங்களுக்கு இத் தமிழ்க் கைதிகள் அழைத்து வரும் போது அநாவசிய கால தாமதங்கள் இடம்பெறலாம்.

இதேவேளை, இக்கைதிகளைப் பார்க்க வரும் பெற்றோர், உறவினர்களுக்கும் தற்போது களுத்துறைக்குச் செல்ல வேண்டியதொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயங்களை விளங்கிக் கொண்டு களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலை தமிழ்க் கைதிகளை மீண்டும் மாற்றம் செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளையும் சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கல்வியியற் கல்லூரி மாணவி

# கட்டடத்திலிருந்து குதித்து காயம்

(கொழும்பு)

பொலனறுவையில் கல்வியியற் கல்லூரி மாணவி ஒருவர் கட்டடமொன்றிலிருந்து கீழே குதித்ததில் காயமடைந்துள்ளார்.

கல்வியியற் கல்லூரி கட்டத்தின் இரண்டாம் மாடியிலிருந்து இந்த மாணவி நேற்று அதிகாலை கீழே குதித்துள்ளதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

காயமடைந்த மாணவி பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலனறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி பத்மநாதன் (J.P)

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்,மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)



கொக்குவிலை பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு மீசாலையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட மகாலட்சுமி பத்மநாதன் 30.01.2012 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், பத்மநாதன் (ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர், கிளிநொச்சி வ.பி.போ.சபை) அவர்களின் அன்பு மனைவியும், லோகதாஸ் (நோர்வே), பிரதீபா (கனடா), மைதிலி(நோர்வே), காலஞ்சென்ற மலர்விழி, வதனதாஸ் (நோர்வே), கேதனி ஆகியோரின் அன்புத்தாயாரும், கோகிலா பாரதி (நோர்வே), யோகலிங்கம் (நோர்வே), அகலிகை (நோர்வே), விஜய குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிநயன், நிவேதிதா, ஜஸ்மினி, வாசவி, காலஞ்சென்ற சர்மினி, கம்சிகா, கவியரசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சோமஸ்கந்தராசா, கணேசன் மற்றும் கமலாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் வடிவாம்பிகை (தாதிய உத்தியோகத்தர், டெல்மன் வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து, திசைவீரசிங்கம்,சிவபாக்கியம் மற்றும் இராசமணி (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.02.2012 (வெள்ளிக்கிழமை) அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 11 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை. (7420) தகவல் :- குடும்பத்தினர்.

# மும்மொழிக்கொள்கையே இன்றைய காலத்தின் தேவை

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க மும்மொழி கொள்கை வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருந்தால் நாட்டில் 30 வருட காலத்தை பின்னுக்கு தள்ளிய யுத்தம் இடம்பெற்றிருக்காது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் மும்மொழிக் கொள்கைக்கான தேவையை புரிந்து கொண்டுள்ள எமது அரசாங்கம் அதனை தற்போது ஆரம்பித்து வைத்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இளைஞர் விவகார மற்றும் திறன பிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிந்துள்ள நிலையில் தொழிற்பயிற்சி மற்றும் தொழில் கல்வி விடயத்தில் வடக்கு, கிழக்கு நிலைமை எவ்வாறு உள்ளது என்று ஊடகவியலாளர் தரப்பிலிருந்து கேள்வியெழுப்பப்பட்டது.

இந்நிலையில் அமைச்சர் அங்கு மேலும் கூறுகையில், யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தொழில் பயிற்சி துறையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறந்த முன்னேற்றத்தை நாங்கள் காண்கின்றோம். முக்கியமாக தொழிற்பயிற்சி துறையில் அதிகளவு வடக்கு, கிழக்கு பகுதி இளைஞர், யுவதிகளே பாதிக்கப்பட்டனர். எனவே, எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எமது பொறுப்பாகும்.

இளைஞர் சேவை மன்றமும் வடக்கில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. முக்கியமாக கடந்த வருடம் கொடி விற்பனையில் யாழ்ப்பாண மாவட்டமே முதலிடத்தில் உள்ளது.

இதேவேளை, நாட்டில் மும்மொழிக் கொள்கை வேலைத்திட்டத்தை எமது அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அதாவது நாட்டின் தற்போதைய நிலைமையில் மும்மொழிக் கொள்கையானது மிகவும் அவசியமானதென்று உணர்ந்தமையினாலேயே அதனை செய்துள்ளோம்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் காலத்தில் மும்மொழிக் கொள்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தால் 30 வருட காலமாக யுத்தம் நடந்திருக்காது என்றார். (அ-2)

## வட்டு. மத்திய கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சபாரத் தினசிங்கி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) இ.தமிழ்மாறன், சிறப்பு விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் ச.சர்வானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## ஆயிரத்து 82 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

தெற்கு அதிவேக வீதி திறக்கப்பட்ட நாள் தொடக்கம் இதுவரை ஆயிரத்து 82 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிவேக வீதிப் போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக அந்தப் பொலிஸ் பிரிவு குறிப்பிடுகின்றது.

அதிக வேகத்துடன் வாகனம் செலுத்துதல் மற்றும் இடப்புறமாக வாகனத்தை செலுத்தாமை ஆகிய காரணங்களுக்காக சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் தெற்கு அதிவேக வீதியில் 88 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக போக்குவரத்து பொலிஸ் பிரிவு கூறியுள்ளது. தெற்கு அதிவேக வீதி கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. (அ-2)

# எமது கட்சியை உடைத்து வேறாக்க அரசாங்கம் முயற்சித்து வருகின்றது

நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியினை ஏற்படுத்துவதற்குரிய பயணத்தை தடையின்றி முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கையில், அரசாங்கம் எமது கட்சியினை பிளவுபடுத்தி வேறாக்க முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச கூறினார்.

புத்தளத்திற்கு விஜயம் செய்த அவர் ஆனமடுவ கல்லடி- மூன்றாம் கட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள அசோகாராம பௌத்த விகாரையில் அவ்விகாரையின் வளர்ச்சிக்காக நிதி உதவி வழங்கும் நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய சஜித் பிரேமதாச எம்.பி. கூறியதாவது,

இந்த அரசாங்கமானது இந்நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை விட்டுவிட்டு இந்நாட்டு மக்களுக்கு பல்வேறு துன்பங்களைக் கொடுத்து வருகின்றது.

அரசாங்கம் செய்ய வேண்டிய மக்களுக்கான சேவைகளை இன்று எதிர்க்கட்சியே செய்கின்றது. *சசுனட அருண* எனும் வேலைத்திட்டத்தின் மூலம் இந்நாட்டில் உள்ள அனேகமான சமய ஸ்தலங்களுக்கு நாம் உதவி செய்துள்ளோம். 2600 ஆம் சம்புத்த ஜெயந்தியையொட்டி எதிர்காலத்தில் 500 சமய ஸ்தலங்களுக்கு உதவி செய்ய இருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியானது என்றும் உறுதியுடன் முன்னேறிச் செல்லும். எமது கட்சியை உடைத்து வேறாக்க இந்த அரசாங்கம் முயன்று வருகின்றது. இந்நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் வரை எமது இந்தப் பயணம் தொடரும் என்றார். (அ-2)

## சட்டவிரோதமாக மலேசியாவிற்கு ஆட்களை அனுப்பியவர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை மலேசியாவுக்கு அனுப்பும் நடவடிக்கையுடன் தொடர்புடைய வெளிநாட்டு தம்பதியினர் உள்ளிட்ட மூவர் மாத்தளை திக்கிரியாவ பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மாத்தளை பிரிவில் தீர்வு காணப்படாத குற்றச் செயல்களை விசாரிக்கும் பிரிவினால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரிடமிருந்து நான்கு கடவுச் சீட்டுகளுடன் ஒரு இலட் சத்து 28 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு தம்பதியினருக்கு ஒத்தாசை புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான மூவரும் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர். (அ-2)

# மனித உரிமைகளை பற்றிப்பேச அமெரிக்காவுக்கு என்ன தகுதி?

## அமைச்சர் சம்பிக்க கேள்வி

(கொழும்பு)

இலங்கை ஒருபோதும் அமெரிக்காவை மதிக்காது. மனித உரிமைகளைப் பற்றிப் பேசக் கூட தகுதியற்ற அமெரிக்கா இன்று மனித உரிமை காப்பாளனர்க செயற்பட முயற்சிப்பது வேடிக்கையாகும் என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இலங்கை மீதான எல்லை மீறிய தலையீட்டுக்கு விரைவில் முடிபு கட்டப்படும். தமிழர்களையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க எந்தவொரு நாடும் இலங்கைக்கு பாடம் கற்பிக்க வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் தொடர்ந்தும் கூறுகையில்,

அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகள் பலவும் இலங்கைக்கு எதிராக கடந்த பல காலமாக செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக உள்நாட்டு பயற்கரவாதப் போரினை முடிவிற்கு கொண்டு வந்ததன் பின்னர் மேற்படி நாடுகளின் தலையீடுகள் படுமோசமான முறையில் மேலோங்கியுள்ளன.

எவ்வாறாயினும் ஏனைய நாடுகளின் தலையீட்டுக்கு இலங்கை அரசு ஒரு போதும் இடமளிக்காது.

ஈரான், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் அமெரிக்கா மேற்கொண்ட மனித உரிமைகள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும்.

பாகிஸ்தானுக்குள் அனுமதியின்றி ஊடுருவி ஒசாமா பின்லேடனை கொலை செய்த அமெரிக்கா



புலி பயங்கரவாதியான ருத்திர குமாரை பாதுகாத்து வருகின்றது.

இன்று சுதந்திரமாகவும் அமைதியாகவும் உள்ள இலங்கை தமிழ் மக்களை மீண்டும் பிரச்சினைகளுக்குள் தள்ளிவிடவே அமெரிக்க கூட்டணி முயற்சிக்கின்றது.

இதனை தோல்வியடையச் செய்ய ஏனைய நட்பு நாடுகளுடன் இணைத்துக் கொண்டு இலங்கை நடவடிக்கை எடுக்கும் என்றார். (அ-2)

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 6 மற்றும் 24 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை *உட்படுத்தற் கல்வி* என்ற தலைப்பில் செயலமர்வு 1,2 ஆகிய தரங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள *துரித கற்றல் செயற்றிட்டம்* என்ற செயலமர்வில் ஆரம்பக் கல்வி பகுதித் தலைவர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள *வாய்மொழி ஆங்கிலம்* என்ற செயலமர்வில் தரம் 1,2 இல் கல்வி கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இச்செயலமர்வில் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)



யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் தரம் 3 மாணவர்களினால் அண்மையில் நடாத்தப்பட்ட கண்காட்சி நிகழ்வினையும் பங்குகொண்ட ஆசிரியர், மாணவர்களினையும் படத்தில் காணலாம்.

# பாதுகாப்பு விவகாரம் தொடர்பில் விவாதிக்க கோத்தபாய இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட ஒரு குழுவினர் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக புதுடில்லி சென்றுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஆண்டுதோறும் நடைபெறும் பாதுகாப்பு கலந்துரையாடல் புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இதில் கடலோரப் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் இந்து சமுத்திரத்தில் அனைத்துலக ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இந்தியப் பாதுகாப்புச் செயலர் சசிகாந்த் சர்மா தலைமையிலான குழுவினருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளருடன் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் மற்றும் இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் இந்தப் பேச்சுகளில் பங்கேற்கவுள்ளனர்.

மேலும், இந்தக் கலந்துரையாடல்களின் போது இந்திய பாதுகாப்புக் கல்லூரிகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட தற்போதுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ள இலங்கையின் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

எனினும் விரிவான தகவல்களை வெளியிட அவர் மறுத்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பயணத்தின்போது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

(அ-2)

# திருமுறிகண்டி இந்துவின் மெய்வல்லுநர் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஆ.சூசைநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.பங்கயச்செல்வன், திருமுறிகண்டி இலங்கை வங்கி முகாமையாளர் யோ.கணாதரன், 13 ஆவது பிரிவு மேஜர் ஆர்.எம்.எஸ்.எல்.ஆர். கமகேந்திரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(அ-3-15)

# சீபா உடன்படிக்கை தொடர்பில் ஆய்வுகளை துரிதப்படுத்த உத்தரவு

இந்தியாவுடன் கையொப்பமிடவுள்ள பொருளாதார பங்குடைமை (சீபா) ஒப்பந்தத்தை மறுபரீசீலனை செய்யவென நியமிக்கப்பட்ட குழுவிடம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை விரைவாக செய்யும்படி கேட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் வர்த்தகத்தை தாராளமயப்படுத்தும் நோக்கில் சீபா உடன்படிக்கை கடந்த 2008 இல் கையொப்பம் இடப்படவிருந்தது. இருப்பினும் உள்நாட்டு கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சியாளர்கள் உட்பட சில தரப்பினரின் எதிர்ப்புக் காரணமாக இது நிறுத்தி வைக்கப்பட்டது.

பின்னர் இந்த பிரச்சினையை ஆராயவென அரசாங்கம் ஒரு குழுவை கடந்த வருட நடுப்பகுதியில் நியமித்தது. அக்குழு இப்போது தொழிற்பட்டுக் கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை கையொப்பமிடுவதன் மூலம் இலங்கை இந்தியாவுடன் வர்த்தகத்தை மேம்படுத்துவது அவசியமானது என பிரபல பொருளியலாளரான பேராசிரியர் நோகன் சமரஜீவ அண்மையில் கருத்து தெரிவித்திருந்தார்.

இதன்மூலம் இந்தியாவின் வளர்ச்சியை இலங்கை பயன்படுத்திக்கொள்ள முடியும் என அவர் கூறினார். ஐ.தே.க. இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளபோதும் ஜே.வி.பி. போன்ற கட்சிகள் இந்த ஒப்பந்தத்தை விரும்பவில்லை.

இந்திய உற்பத்திகள் இலங்கையில் வந்து குவியும் போது உள்நாட்டு உற்பத்திகள் பாதிக்கப்படும் என அவை கருதுகின்றன. (அ-2)

# தேசிய கொள்கை இல்லாத நாடு இலங்கை

## அர்ஜீன ரணதுங்க எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

எந்தவொரு துறையிலும் தேசிய கொள்கையில்லாத ஒரே நாடு இலங்கை என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்வித்துறையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இசட் புள்ளி குளறுபடிகளினால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். முக்கிய துறைகளில் தேசியக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி உள்ளிட்ட துறைகள் தொடர்பில் தேசிய ரீதியான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

எந்தவொரு துறைக்கும் தேசிய ரீதியாக கொள்கை வகுக்கப்படாத ஒரே நாடாக இலங்கை திகழ்கின்றது என அர்ஜுன தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பிரதேச பாடசாலை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புதிய எரிபொருள் கொள்கலன் வாகனப் பதிவுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருள் ஏற்றிச் செல்வதற்கு புதிதாக கொள்கலன் வாகனங்களைப் பதிவு செய்வதை இடைநிறுத்துவதற்கு பெற்றோலிய தொழிற்றுறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

எரிபொருள் கொண்டு செல்வதற்காக போதியளவு வாகனங்கள் காணப்படுவதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

இது தொர்பாக பெற்றோலியத்தைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் பிரதான நிறுவன உத்தியோகத்தர்கள், தனியார் கொள்கலன் வாகன உரிமையாளர்கள், சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோரிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 350 தனியார் எரிபொருள் கொள்கலன் வாகனங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் நாளாந்தம் 150 வாகனங்களே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக பெற்றோலிய தொழிற்றுறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, எரிபொருள் கொள்கலன் வாகன உரிமையாளர் எவரேனும் எரிபொருள் மோசடியில் ஈடுபடுவார்களாயின் அவர்களின் பதிவுகளை உடனடியாக இரத்துச் செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

## ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் காலநேரத்தை விரயம் செய்யக் கூடாது என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்மூலம் உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்படும் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதியானது வெறுமனே காலத்தை விரயமாக்கும் முயற்சியாக கருதப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனது வழமையான தந்திரோபாயத்தை இந்தத் தடவையும் பயன்படுத்த முயற்சிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேசத்திற்கு ஒருமுகத்தையும் உள்நாட்டில் மற்றுமொரு முகத்தையும் அரசாங்கம் காட்டி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பத ற்கு துரிதகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் எவரின் அனுமதியையும் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கிழக்கில் உள்ள சிங்களவர்களின் காணியை தமிழர்கள் கொள்ளையிடுகின்றனராம்

## கூறுகிறது திவயின

(கொழும்பு)

கிழக்கு மாகாண பெரும்பான்மை இனத்தவரின் காணிகளை தமிழர்கள் கொள்ளையிட்டு வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் பௌத்த விகாரைகள் மற்றும் சிங்கள மக்களுக்கு சொந்தமான காணிகள், போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அபகரிக்கப்படுவதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காணி மோசடிகளுக்கு பிரதேசத்தில் கடமையாற்றி வரும் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களும் உடந்தையாக செயற்படுகின்றனர். காணி மோசடிகள் தொடர்பில் கிழக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிங்கள மக்களுக்கு சொந்தமானது மட்டுமன்றி பௌத்த விகாரைகளுக்கு சொந்தமான காணிகளையும் தமிழர்கள் பலவந்தமாக அபகரித்துக் கொள்கின்றனர் என மட்டக்களப்பு மங்களாராம விகாராதிபதி சுமன தேரர் தெரிவித்துள்ளார்.

(அ-2)



இலங்கை மத்திய வங்கி மீது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டு நேற்றுடன் 16 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த தாக்குதலின்போது கொல்லப்பட்ட 41 வங்கி ஊழியர்களையும் நினைவுகூறும் முகமாக நேற்று முன்தினம் வங்கிக் கட்டடத்துக்குள் சிலையொன்று மத்திய வங்கி ஆளுநரால் திறக்கப்படுவதை படங்களில் காணலாம்.

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 28

# யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்


வட ஆபிரிக்கப் பாலைவனத்தில் கிரேட் பிரமிட்டு ஊடாக பிரித்தானிய இராணுவமும் இந்தியத்துருப்புகளும் அணிவகுத்துச் செல்கின்றன

ஐரோப்பாவை மத்திய கிழக்கு, வடக்கு ஆபிரிக்க நாடுகளுடனும் மற்றும் இந்திய பசுபிக் கடலோர நாடுகளுடனும் இணைக்கும் சுருக்கமான போக்குவரத்து மார்க்கங்கள் செல்லும் மத்திய தரைக்கடலில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் போரிடும் இருதரப்புகளுமே பெரும் முக்கியத்துவம் அளித்தன. ஜிப்ரால்டரை தம்வசம் வைத்திருந்த ஆங்கிலேயர்கள் மத்தியதரைக்கடலிலிருந்து அட்லாண்டிற்குப் போகும் வழியைக் கண்காணித்தனர். மத்தியதரைக் கடலின் மையத்தில் இத்தாலிக்கும் வடக்கு ஆபிரிக்காவிற்கும் இடையேயான சுருக்கமான போக்குவரத்து மார்க்கங்களில் மால்டா இருந்தது. மிகப் பெரும் கப்பற்படைத் தளமாகிய அலெக்சாந்திரியா பிரிட்டனின் மத்தியதரைக்கடல் கப்பற்படை முழுவதையுமே உள்ளடக்கியிருந்தது. சூயஸ் கால்வாயை தம்வசம் வைத்திருந்ததால் மத்தியதரைக்கடலில் இருந்து இந்தியாவிற்குச் செல்லும் மிகச்சுருக்கமான பாதை ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்தது.

மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து ஆங்கிலேயர்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று ஒரான், அல்ஜீரியா, காசபிளான்கா மற்றும் தோக்கார் ஆகிய துறைமுகங்களில் கணிசமான அளவில் இருந்த பிரெஞ்சுக் கடற்படையைக் கைப்பற்றுவது அல்லது செயலற்றதாக ஆக்குவதாகும். 1940 ஜூலை ஆரம்பத்தில் பிரிட்டிஷ், கடற்படையை முற்றுகையிட்டது. ஜேர்மனிக்கும் இத்தாலிக்கும் எதிராக உடனடியாக யுத்தத்தில் இறங்குதல், அல்லது குறைக் கப்பட்ட அணிகளுடன் பிரிட்டிஷ் துறை முகங்களுக்குச் செல்ல ஒப்புக்கொள்ளுதல், கப்பல்களை மூழ்கடித்தல், இவற்றில் ஏதாவது ஒன்றை முடிவு செய்யுமாறு பிரெஞ்சுக் கடற்படைக்கு காலக்கெடு அளிக்கப்பட்டது. இக் காலக்கெடு நிராகரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கப்பல்கள் பிரெஞ்சுக் கப்பற்படையைப் பெரும் குண்டு வீச்சிற்கும் டர்பேடோ தாக்குதலுக்கும் உள்ளாக்கி பல கப்பல்களை மூழ்கடித்தன. ஒரு சில பிரெஞ்சுக் கப்பல்களுக்கு மட்டுமே துலோனுக்கு தப்பிச் செல்ல முடிந்தது.

டெகோல் தனது நினைவுக் குறிப்புக்களில் இந்த நடவடிக்கைகளை ஆங்கிலேயர்களின் காட்டுமிராண்டித்தனமான புயல் வீச்சின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார். ஆனால், பிரெஞ்சுக் கடற்படை ஆங்கிலேயர்களுக்கு எதிராக பகைமை நடவடிக்கைகளை எப்போதுமே திட்மிடவில்லை. என்று அவர் எழுதினார். ஜேர்மனியப்-பிரெஞ்சு சமரசத்தின் நிபந்தனைகளை நம்பாதிருந்தாலும் எந்த நம்பிக்கை பிரெஞ்சுக்கடற்படை வீரர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் மறுக்கப்பட்டதோ அதற்கு இவ்வீரர்கள் தகுதியானவர்கள்.

பிரெஞ்சு கப்பல் களை மூழ்கடித்த பின் ஆங்கிலேயர்கள் தமது மத்திய தரைக் கடல் கப்பற்படையைப் பலப்படுத்தி அதை இருபகுதிகளாக- கிழக்கு கப்பற்படை (5 போர் கப்பல்கள், 2 விமானந் தாங்கிக் கப்பல்கள் 10 குரூசர்கள், 26 நாசகாரிக்ப்பல்கள், 12 நீர்முழ்கிக் கப்பல்கள்) மற்றும் மேற்கு தனிப் படையணி (பெரிய குரூசர், விமானந் தாங்கிக் கப்பல், 5 குரூசர்கள், 10 நாசகாரிக் கப்பல்கள், 6 நீர்முழ்கிக் கப்பல்கள்) என்று பிரித்தனர்.


இத்தாலியின் குரூசர் ஸான் ஜிர்ஜியோ போர்க்கப்பல் டார்பர் துறைமுகத்தில் எரிகிறது- பெப்ரவரி, 18, 1941

கடல் வழிப் போக்குவரத்து மார்க்கங்களைப் பாதுகாத்து, எதிரியின் கடற்படையுடனான போரின் மீதும் மால்டாவை தன்வசம் வைத்திருப்பதன் மீதும் முக்கியச் சக்திகளைச் செலுத்துவதுதான் பிரிட்டிஷ் கப்பற்படையின் முக்கிய கடமையாக இருந்தது.

**வி.அ.மத்சுலேன்கோ**

1940 ஜூன் 10 ஆம் திகதி மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் தொடங்கிய இராணுவ நடவடிக்கைகள் முதலில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றியைத் தந்தன. உதாரணமாக 1940 நவம்பரில் ஆர்க்ரோயல் எனும் விமானந்தாங்கிக் கப்பலிலிருந்து இயங்கிய பிரிட்டிஷ் விமானங்கள் தராண்டோவிலிருந்து இத்தாலியக் கடற்படைச் சக்திகளைப் பலத்த தாக்கிதலுக்கு உள்ளாக்கின. 3 பெரிய கப்பல்களையும் இரண்டு குரூசர்களையும் சேதப்படுத்தி நீண்ட காலத்துக்குச் செயலற்றுப் போகச் செய்தன. இதன் விளைவாய் இத்தாலியக் கப்பற் படையின் நிலை மிகவும் மோசமாக்கியது. ஆபிரிக்காவிற்கு கடல் வழியாகப் பொருட்கள் எடுத்துச் செல்வது கணிசமான அளவு கடினமாகியது.

பாசிச ஜேர்மனியின் படைத் தலைமை 1940 டிசம்பரில் 140 குண்டுவீச்சு விமானங்கள், 22 சண்டை விமானங்கள், 16 வேவு விமானங்கள் அடங்கிய விமானப்படை கோர்பசை சிசிலிக்கு அனுப்பியது. பின்னால் பிரிட்டிஷ் கப்பற்படைக்கு கணிசமான இழப்பை ஏற்படுத்தவும் கண்ணிவெடிகளை வைத்ததன் மூலம் சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்தைக் கடினமானதாக ஆக்கவும் பாசிஷ்டுகளால் முடிந்தது.


1941 மார்ச் இறுதியில் மத்தப்பான் முனை அருகே (கிரீட் தீவிற்குத் தெற்கே) நடந்த சமரில் இத்தாலியக் கப்பற்படை இன்னுமொருதோல்வியை அடைந்தது. பிரிட்டிஷ் கப்பற்படை இரவு நேரச் சண்டையில் ராடார் சாதனங்களின் உதவியோடு இத்தாலியர்களுக்குச் சொந்தமான ஒரு போர்க் கப்பலையும் 3 கனரக


பிரான்ஸ் அதிக ... மத்தியில் சில போர் முனைகளிலிருந்து பின்வாங்குவதை தாங்கமுடியாமல் கண்ணீர்விடும் பிரான்சின் பிரஜைகள்

## பிரான்ஸின் சரணடைவிற்குப்பின் பிரிட்டன் மீதான தாக்குதல் ஆரம்பம்

குரூசர்களையும் 2 நாசகாரிக் கப்பல்களையும் கண்டுபிடித்து மூழ்கடித்தது. ராடார் சாதனங்கள் இல்லாததாலும் எதிரியைக் கண்டுபிடிக்காததாலும் இத்தாலியர்கள் சுடத் தொடங்கவேயில்லை.

ஆனால், இதற்குப் பின்னால், குறிப்பாக 1941 ஆம் ஆண்டு மேயில்


பிரித்தானியப் போர்க்கப்பல் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுடுவதற்கு ஆயத்தமாக

ஜேர்மனி லேயர்கள் கிரீட் திவைக் கைப்பற்றியபின், பிரிட்டிஷ் கப்பற் படையின் நிலை பெரிதும் மோசமாகியது. இக்காலகட்டத்தில் இது 3 குரூசர்களையும் 7 நாசகாரிக் கப்பல்களையும் இழந்தது (மூழ்கடிக்கப் பட்டன), போர்க் கப்பல்கள், ஒரு விமானந்தாங்கிக் கப்பல், 6 குரூசர்கள் மற்றும் 7 நாசகாரிக் கப்பல்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

**6. சோவியத் யூனியனின் மீது படையெடுப்பதற்கான பாசிச ஜேர்மனியின் தயாரிப்பு. "பார்பரோசா" திட்டம்**

ஜேர்மனிய ஏகாதிபத்திய வாதிகளால் நீண்ட காலமாக ஊட்டி வளர்க்கப்பட்ட த்ராங் நாஹ் ஒஸ்தேன் (கிழக்கு நோக்கிய அணிவகுப்பு) என்ற ஆக்கிரமிப்புக் கருத்துக்கள் நாஜிகளின் முழு ஆதரவைப் பெற்றன. பாசிசத்தின் ஒருவித வேலைத் திட்டமாகத் திகழும் மெய்ன் காம்ஃப் எனும் நூலில் ஹிட்லர் வெளிப்படையாகவே பின்வருமாறு அறிவிக்கின்றான். "ஐரோப்பாவில் எல்லா நிலப்பரப்புக்களையும் பெறுவதைப் பற்றிப் பேசப்படுகையில் இதை முக்கியமாக ருஷ்யாவிட மிருந்துதான் பிடுங்க வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் புதிய ஜேர்மனியப் பேரரசு ஏற்கனவே தெவ்தோன் வீரத்திருந்தகைகளால் இப்படிப்பட்ட பாதையில் மீண்டும் பயணத்தைத் தொடங்க வேண்டும்.

சோவியத் யூனியனின் மீது படையெடுக்கத் தயாரான பாசிஷ்டுகள் உலகின் முதல் சோஷலிச அரசை ஒழித்துக் கட்டுவது, கோடிக் கணக்கான சோவியத் மக்களை சுட்டுத் தள்ளுவது எஞ்சியவர்களை அடிமைகளாக ஆக்குவது என்ற நோக்கங்களை தம் முன்வைத்தனர். 1941 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி வேர் மஹ்டின் ஜெனரல்கள் முன் பேசும் போது ஹிட்லர், ருஷ்யாவுடனான யுத்தத்தில் ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டத்தைப் பற்றிப் பேசப்படுகிறது.(தொடரும்)

# ஜனாதிபதி மாறுபட்ட கருத்துக்களையே வெளியிட்டு வருகிறார்-சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் அழைப்பு விடுக்கப்பட்டதாக ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ள போதும் அது தொடர்பான எவ்வித அழைப்புகளும் தமக்கு கிடைக்கவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் கூட்டமைப்பு இன்னும் தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாறுபட்ட கருத்துக்களையே தெரிவித்து வருகிறார். இனப்பிரச்சினை தீர்வுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்போவதாக முன்னர் குறிப்பிட்டார்.

அந்தப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்படாத நிலையில் ஒரு வருடம் கழித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கப் போவதாக குறிப்பிட்டுள்ளார். தற்போது புதிய யோசனையாக சர்வகட்சி கூட்டம் பற்றிக் கூறுகின்றார்.

எனவே ஜனாதிபதி என்ற ஒருவர் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டுமே ஒழிய இவ்வாறு மாறுபட்ட பேச்சுக்களை பேசுவது நல்ல காரியமல்ல என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (அ-2)

## இலங்கை மீனவர்களை விடுவிக்க கப்பம்கோரும் கடற்கொள்ளையர்கள்

இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு சோமாலிய கடற்கொள்ளையர்கள் 68 கோடி ரூபா கப்பம் கோரியுள்ளனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த ஆறு மீனவர்களை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர். இந்த மீனவர்களை விடுதலை செய்வதற்கு 68 கோடி ரூபா பணம் கப்பமாக வழங்கப்பட வேண்டுமென இவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களை விடுதலை செய்வதற்காக கோரப்பட்ட மிக அதிக கப்பத்தொகை இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.பல மாதங்களாக இந்த மீனவர்கள் சோமாலியா கடற்கொள்ளையர்களினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.குடும்ப உறுப்பினர்களிடம் சோமாலிய கடற்கொள்ளையர்கள் தொலைபேசி மூலம் கப்பம் கோரி மிரட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மாகாணசபைகளுக்கு தற்போதைய அதிகாரங்கள் போதுமானவை

## ஊவா மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதாகவுள்ளன. இதைவிட மேலதிக அதிகாரங்கள் தேவையற்றதாகும்.

இவ்வாறு ஊவா மாகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ மொனராகலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் முறையுடன் சிரமமாக செயற்படுத்தினால் அவ் அதிகாரங்களைக் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பயன்படுத்தியே ஊவா மாகாணத்தின் பத்தாயிரம் பேருக்கு காணி உறுதிகளை வழங்க முடிந்திருக்கின்றது.

இதைப்போன்று பல்வேறு வேலைத் திட்டங்களை என்னால் நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது.

இவ்வாறே நாட்டின் ஏனைய மாகாண சபைகளும் செயற்படவேண்டுமென்பதையே நான் விரும்புகின்றேன். இதைவிடுத்து அதிகாரங்கள் வழங்கப்பட வில்லையென்பதில் நியாயம் இல்லை.

உணர்வுபூர்வமாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு மாகாண சபைகளினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதேயாகும்.

இவ் அதிகாரங்களைப் பயன்படுத்தி பாரிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும்.

மத்திய அரசின் நிதி உதவிகளையும் பெற்று மாகாண மக்களின் அபிலாசைகள், தேவைகள், விருப்புக்கள் ஆகியவற்றிற்கேற்ப சிறப்பான சேவைகளையாற்றவும் மாகாண சபைகளுக்கு இயலும் என்று கூறினார். (அ-2)

# தமிழ்நாட்டுக்கு வரும் அமைச்சர்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

## ஜெயாவை வேண்டினார் மஹிந்த

தமிழ்நாட்டுக்கு வரும் தனது அமைச்சர்கள் மற்றும் உறவினர்களை கவனமாகப் பாதுகாக்குமாறு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்நாட்டில் தனது அமைச்சர்கள் மற்றும் உறவினர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

தனது உறவினரும் தொழிலதிபருமான திருக்குமார் நடேசன், பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷவை திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்துக்காகவே தாக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவர் ஒரு இந்து என்றும் வடக்கைச் சேர்ந்த தமிழர் என்றும் கூறிய அவர், இந்தத் தாக்குதலை இந்திய மீனவர்கள் கூட எதிர்த்துள்ளனர் என்றும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)



வடமாகாண லயன்ஸ் கழக புற்றுநோயாளர் மூலதனத்திட்ட நிதியிலிருந்து 25 புற்று நோயாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் நிற்பதையும் புற்றுநோயாளர் பயனாளி ஒருவருக்கு லயன் என்.சோமசுந்தரம் 4 ஆயிரத்து 500 ரூபா நிதியுதவியினை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கதிர்காமத்தில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி 5 வருடங்கள் பழைமையானது

## மேலதிக அரசாங்க ஆய்வாளர் டபிள்யூ ஏ.ஆர்.பெனாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

கதிர்காமத்தில் உள்ள விடுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி 5 வருடங்கள் பழைமையானது என மேலதிக அரசாங்க ஆய்வாளர் டபிள்யூ.ஏ.ஆர். பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது தாக்குதல் நடத்தவென இந்தத் தற்கொலை அங்கி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக மேலதிக அரசாங்க ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் தற்கொலை அங்கி மீட்கப்பட்டதும் அது தொடர்பான தீவிர விசாரணைகள் நடத்தப்பட்டன.

பின்னர் அத்தற்கொலை அங்கியானது ஐந்து வருடங்கள் பழைமையானது என இனங்காணப்பட்டுள்ளதாகவும் இது குறித்து மக்கள் பீதிடையத் தேவையில்லை என விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இது குறித்து தமக்கு அறிவித்துள்ளதாக மேலதிக அரசாங்க ஆய்வாளர் டபிள்யூ. ஏ.ஆர்.பெனாண்டோ தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதியின் இணைப்புச்செயலாளர் எனக்கூறி மோசடி செய்தவர்கள் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் இணைப்பு செயலாளர் என கூறி கெகிராவை, கல்கிரியாகம பிரதேச இளைஞர்-யுவதிகளுக்கு அரச தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாக பணமோசடி செய்த இரு சந்தேக நபர்களை கல்கிரியாகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கதிர்காமத்தைச் சேர்ந்த அகில ராஜபக்ஷ என்பவரும் குருநாகலையை சேர்ந்த ரவீந்திர சாமர என்ற இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபர்கள் நேற்று கெகிராவை நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 8 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் குடும்பத்தினரின் படங்கள் ஒட்டப்பட்ட மோட்டார் கார் ஒன்றில் வந்துள்ள இவர்கள் கல்கிரியாகம பிரதேசத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து இளைஞர் -யுவதிகளை அங்கு அழைத்து தொழில் பெற்றுத் தருவதாக கூறி 50 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கல்கிரியாகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.சீ.எஸ்.தயாவன்ச மேலதிக விசாரணைகளை நடத்துகின்றார். (அ-2)

# மேல் மாகாணத்தில் 55 வீதமான நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்

(குருநாகல்)

டெங்கு தொற்றுநோய் மீண்டும் தீவிரமாக பரவி வரும் நிலையில் நாடளாவிய ரீதியாக கணக்கிடும் போது மேல் மாகாணத்தில் 55 சதவீதமான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் பிரதான தொற்றுநோய் மருத்துவ நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் பாரியளவில் டெங்கு தொற்றுடையவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் டெங்கு நோய்த் தொற்று தொடர்பான செயற்பாட்டு படையணியின் முதலாவது செயற்றிட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குருணாகலை பிரதேசத்தில் கோழிப் பண்ணையொன்றில் ஒரே தடவையில் பாரிய அளவில் கோழிகள் மரணமானமை தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த பண்ணையில் ஒரு கோழி பறவைக்காய்ச்சலுக்கு சமனான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமைக்கான அறிகுறிகளுடன் மரணமானமை கண்டறியப்பட்டுள்ளது.

(அ-2)

# இரண்டு விபத்துக்களில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம்-கைதடி பாலத்தருகில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரிலிருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த கப் ரக வாகனம் ஒன்றும் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வேலணை புளியங்கூடலைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சிற்பரன் (வயது 32) மற்றும் அவரது மனைவி ஜெயந்தி ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இதேவேளை, மாதகல் பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றுமொரு வீதி விபத்தில் பஸ்நடத்துநர் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் பஸ் தரப்பு நிலையத்தில் பஸ்ஸின் வருகைக்காக காத்திருந்த வேளையில் வேகமாக வந்த மினி பஸ் ஒன்று அவரின் மீது மோதியுள்ளது. சம்பவத்தில் எம். பிரியதர்ஷன் என்ற நடத்துநரே காயமடைந்தவராவார். (எ-8)

# அஜித்தின் அடுத்த படம் "தலைவன் இருக்கிறான்"

நடிகர் அஜித் நடிக்கும் பில்லா-2 முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த நிலையில் அடுத்து அஜித் நடிக்கப் போவது ஆஸ்கர் ரவிச்சந்திரன் தயாரிப்பில்தான் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆனால், தற்போது இப்படம் தொடர்பாக மேலும் சில தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தல நடிக்கும் இப்படத்திற்கு தலைவன் இருக்கின்றான் என்று பெயரிட்டுள்ளனர். அதைவிட தெலுங்கு ஸ்டார் ரவிதேஜா, உலக நாயகன் கமலஹாசன் ஆகியோர் இத்திரைப் படத்தில் ஒரு சில காட்சிகளில் நடிக்கவுள்ளனர்.

தலைவன் இருக்கின்றான் படத்தின் அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. முதலில் உன்னைப்போல் ஒருவன் படத்திற்கு தலைவன் இருக்கின்றான் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ-8)

# மேலதிகமாக எரிபொருள் வழங்க ஓமான் இணக்கம்

(கொழும்பு)

விமானங்களுக்கான எரி பொருளுக்கு மேலதிகமாக ஏனைய எரிபொருள் வகைகளையும் இலங்கைக்கு வழங்க ஓமான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஓமான் நாட்டின் எண்ணெய் வள அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இந்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக பெற்றோலிய தொழிற்றுறை அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எஸ். சமரதுங்க குறிப்பிடுகின்றார்.

விமானங்களுக்கு பயன்படுத்துகின்ற எரிபொருளை மாத்திரமே ஓமானிடமிருந்து இலங்கை இதுவரை காலமும் இறக்குமதி செய்து வருவதாக அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் தேவை ஏற்படின் ஏனைய எரிபொருள் வகைகளையும் பெற்றுக் கொள்வதற்காக மற்றைய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

(அ-2)

# 2012.02 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1509-போர்த்துக்கலுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண் டது.

★ 1790-வீரபாண்டிய கட்டப்பொம்மன் 47 ஆவது பாளையக்காரராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

★ 1812-கலிபோர்னியாவின் கரையோர ங்களில் ஃபோர்ட் ரொஸ் என்ற இடத்தில் தோல் வர்த்தக குடி யேற்றமொன்றை ரஷ்யா அமைத் தது.

★ 1822-இலங்கையின் ஆளுநராக சேர் எட்வேர்ட் பஜெட் நியமிக்கப் பட்டார்.

★ 1848-மெக்சிக்கோவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப் பட்டது.

★ 1848-கலிபோர்னியாவில் தங்கம் தேடு வதற்காக சீனர்கள் கப்பலில் சான் பிரான்சிஸ்கோ வந்திறங்கினார் கள்.

★ 1878-துருக்கியின் மீது கிரேக்கம் போரை அறிவித்தது.

★ 1880-முதலாவது மின்சார வீதி விளக்குகள் இந்தியானாவில் நிறுவப்பட்டன.

★ 1897-பென்சில்வேனியாவின் தலைநகர் ஹரிஸ்பேர்க் தீயினால் அழிந் தது.

★ 1899-அவுஸ்திரேலியாவின் தலைநகரை சிட்னிக்கும் மெல்பேர்னிற்கும் இடையில் கன்பராவில் அமைப்ப தென முதலமைச்சர்கள் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டது.

★ 1901-விக்டோரியா மகாராணியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

★ 1908-60 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் இந்துக்களின் சிறப்பு நாளான அருத்தோதயம் நிகழ்வு.

★ 1920-எஸ்தோனியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1933-ஜேர்மனியின் நாடாளுமன்றத்தை ஹிட்லர் கலைத்தார்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: ஸ்டா லின்கிராட் போரின் பின்னர் கடைசி ஜேர்மனியப் படைகள் சோவியத் ஒன்றியத்திடம் சரண டைந்தன. 91 ஆயிரம் பேர் உயிருடன் பிடிக்கப்பட்டனர்.

★ 1946-ஹங்கேரியக் குடியரசு அமைக் கப்பட்டது.

★ 1971-உகண்டாவில் ஒரு வாரத்தின் முன்னர் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் இடி அமீன் உகண் டாவின் ஜனாதிபதியாக தன்னை அறிவித்தார்.

★ 1972-டப்ளினில் பிரித்தானிய தூதரகம் தேசியவாதிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

★ 1982-சிரியாவின் ஹமா நகரில் சிரிய அரசு மேற்கொண்ட தாக்குதல்களில் கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1989-ஒன்பது ஆண்டு கால முற்றுகையின் பின்னர் கடைசி ரஷ்யத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறின.

★ 1989-செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஸ்கை தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1998-பிலிப்பைன்சில் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 104 பேர் உயிரிழந்தனர்.

## பிறப்புக்கள்

★ 1522-லியூஜி ஃபெறாரி, இத்தாலியக் கணித ஆய்வாளர் (இ.1565)

★ 1871-பா. வே. மாணிக்கநாயக்கர், அறிவியல், தமிழ் வளர்த்த தமிழிஞர் (இ.1931)

★ 1882-ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (இ.1941)

★ 1977-ஷக்கீரா, கொலம்பியப் பாடகி

★ 1985-உபுல் தரங்க, இலங்கை துடுப்பாட்ட வீரர்

## இறப்புக்கள்

★ 1907-திமித்ரி மெண்டெலீவ், ரஷ்ய வேதியியலாளர் (பி.1834)

★ 1970-பேட்ரண்ட் ரசல், நோபல் பரிசு பெற்றவர் (பி.1872)

★ 1980-வில்லியம் ஸ்டெயின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)

★ 1987-அலிஸ்ரர் மக்லீன், ஆங்கில எழுத்தாளர் (பி.1922)

## சிறப்பு நாள்

★ உலக சதுப்பு நில தினம்.



★ 1924-ஈழத்து நாடகத்துறையின் முன்னோடி நடிகமணி வி.வி.வைரமுத்துவின் பிறந்த தினம். (இ.1989)

# இலங்கை, பாகிஸ்தான் உறவும் இந்திய, சீன நகர்வுகளும்

எப்போதெல்லாம் இந்தியா கடுமையான போக்கைஎடுத்துக்கொள்கிறதோ அப்போதெல்லாம் இந்தியாவிற்கு எதிரான நாட்டுடன் தமதுகூட்டை உருவாக்கிக் கொள்வதில் இவ்விரு நாடுகளும் (பாகிஷ் தான், இலங்கை ) முனைப்பாக இருந்து வந்துள்ளன.

தென்னாசிய நாடுகளிலே இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதை இருதரப்பு அரசாங்கங்களும் பலமுறை வெளிப்படுத்தியுள்ளன. தொடர்ச்சியான தமது உறவுமுறையை மிகச் சிறந்த முறையிலே பேணிவருகின்றன.

இரு நாடுகளுக்கும் இருக்கும் ஒற்றுமைக்கு உள்ளார்த்தமாக அவற்றின் இந்திய எதிர்ப்புப் பேர்க்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்றாகும். தத்தமது நலன்களுக்கு ஏற்றவகையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் அவ்வப்போது செய்து கொள்கின்றன. ஆனால், உள்நாட்டில் சமூக ரீதியாகக் கொண்டுள்ள இந்திய எதிர்ப்பு மனோநிலை காரணமாக பதவிக்கு வரும் எந்த அரசாங்கமும் இவ்விரு நாடுகளிலும் இந்திய எதிர்ப்புப் போக்கிலிருந்து தவறிப் போக முடியாத நிலையில் உள்ளன.

வரலாற்று ரீதியாக இந்தியாவிற்கு இக்கட்டான காலங்களில் இலங்கையும் பாகிஸ்தானும் இணைந்து செயற்பட்டதை காணலாம். அத்துடன் எவ்வெப்போதெல்லாம் இந்தியா கடுமையான போக்கை எடுத்துக்கொள்கிறதோ அப்போதெல்லாம் இந்தியாவிற்கு எதிரான நாட்டுடன் தமது கூட்டை உருவாக்கிக்கொள்வதில் இவ்விரு நாடுகளும் முனைப்பாக இருந்து வந்துள்ளன.

தனது நிலையைக் கடுமையுடன் எடுக்க முடியாத இந்தியாவோ தனது தேவை கருதி இவற்றுடன் கூட்டாக இயங்கி வருகிறது. இந்தியா தனது போக்கை மாற்றி உறுதியான வெளியுறவுக் கொள்கையை கையாள வேண்டும் என்பது பல ஆய்வாளர்களின் வேண்டுகோள்களாக இருந்து வருகின்றன.

இந்த நிலைக்குரிய சாத்தியப்பாடுகள் குறித்த ஆய்வு இது.

பாகிஸ்தான் இந்தியாவுடன் சமபல நிலையைப்பேணும் பொருட்டு உலக ஒழுங்கிற்கு ஏற்றாற்போல் எண்பதுகளில் அமெரிக்காவுடனும், தற்போது சீனாவுடனும் இலங்கையைப்போலவே தமது நலன்களின் அடிப்படையில் எ்திராளியுடன் கூட்டுவைத்து " இந்தியாவைக் கையாள முனைகின்றன.

அல்கைதா இயக்கத்தலைவர் பின்லேடன் பாகிஸ்தான் எல்லைக்குள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அரச ரீதியான உத்தரவு எதுவுமின்றி பாகிஸ்தானிய எல்லைக்குள் நுழைந்து அந்தத் தாக்குதலைச் செய்த அமெரிக்க போக்கின் மீது கோபங்கொண்ட பாகிஸ்தானிய அரசியல்


அசிவ் அலி சார்டறி

வாதிகள் உடனடியாக சீனாவிற்கு தமது பிரமரை அனுப்பிவைத்தனர்.

அமெரிக்காவுக்கு எதிர்ப்பலமாக சீனாவைப் பார்க்கும் பாகிஸ்தான் சீனா ஊடாக தனது அதிருப்தியை தெரிவித்தது. சீனாவும் தனது தரப்பிற்கு ஒரு நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிக்குள் இன்னொரு நாடு நுழைவதை கண்டித்திருந்தது.

இந்தப்போக்கை கருத்தில் எடுத்துக் கொண்ட அமெரிக்க ஆய்வு நிறுவனமான த ஹேரிற்ரேஜ் ஃபவுண்டேசன் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள உறவு நிலை குறித்த ஆய்வு ஒன்றை நடத்தி அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதிலே சீனா, பாகிஸ்தானுக்கு வழங்கும் உதவியில் வரையறைகளைக் கடைப்பிடித்து வந்திருப்பது கண்டறியப்பபட்டிருப்பதுடன், மிகவும் தேவையான காலப்பகுதிகளில் கூட சீன உதவிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டுவந்திருப்பது தெரிய வந்திருக்கிறது.

இருந்த போதிலும் கடந்தகாலங்களில் பயங்கரவாத முறியடிப்பு நடவடிக்கைளின் போது பாகிஸ்தான் மீது மிகக் கடுமையாக நடந்துகொண்ட·போதெல்லாம் இஸ்லாமாபாத் தலைமை பீஜிங் பக்கம் அதீதமாக சார்ந்துவிடக்கூடிய தன்மைகள் குறித்து எச்சரிக்கையாகவே இருந்து வந்தனர்.

இதன்பொருட்டு கணிசமான அளவு பொருளாதார இராணுவ உதவிகளை கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கி வந்திருந்தது.

ஆனால், சீனாவின் கரிசனையோ பாகிஸ்தானில் அதீதமாக படர்ந்திருக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதத்திலேயே இருந்துவந்திருக்கின்றது என்பது இந்த ஆய்வறிக்கை கண்டறிந்த விடயமாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு சீனாவின் வடமேற்கு மாநிலமான சிங் ஜியாங் பகுதியில் வாழும் உய்கிர் இன் இஸ்லாமியர்கள் ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தனர். பாகிஸ் தானில் இஜ்லாமிய அடிப்படை வாதத்திற்கு இருக்கும் செல்வாக்கின் அடிப்படையில் உய்கிர் இன போராளிகள் இராணுவப்பயிற்சி பெற்றுக்கொள் வதற்குரிய வசதிகள் தென்பட்டதைத் தொடர்ந்து


கூஜின்ராவ

பாகிஸ்தானின் தயவு சீனாவிற்குத் தேவைப் பட்டது.

பாகிஸ்தானிய வடகிழக்கு எல்லை. மாநிலங்களில் பாதுகாப்பு நிலைமைகள் எப்பொழுதும் தளர்வுற்ற நிலையிலேயே இருப்பதால் போராளிகளின் நடமாட்டம் குறித்து சீனா, பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டி வந்தது. இதனாலேயே மேற்சீன பகுதிகளில் வன்முறை அதிகரித்து வருகிறது என்பது சீன அதிகாரிகளின் குற்றச்சாட்டாகும்.


அதேவேளை அதீத பாதுகாப்பு நெருக்கடிகளைக் கொடுப்பதன் மூலம் உய்கிர் சமூகத்தினுள்ளே கிளர்ச்சிகள் ஏற்படலாம் என்பதை கருத்திற் கொண்ட சீன அரசு பாகிஸ்தானில் நிலை கொண்டு இருக்கும் நேற்றோ படைகளுக்கு தளபாட உதவிகள் புரிவதன் மூலம் தனது எல்லைக்குள் இடம்பெறும் கிளர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்கிறது.

தனது உள்நாட்டு சமூக கிளர்ச்சிகளை கட்டுக்குள் வைத்திருக்க முனையும் சீன அரசுக்கு பாகிஸ்தானிய நிலையை கணிசமான அளவு தந்திரோபாயத்துடன் பரந்த அளவில் கையாள வேண்டிய தேவை உள்ளது.

இத்தகைய சீனாவின் பரந்தளவான பாகிஸ்தான் மீதான வெளியுறவுக் கொள்கைக்கு அயல் நாடான இந்தியாவும் முக்கியம் வாய்ந்தது. வல்லரசான அமெரிக்கா ஒத்தாசையுடன், சீனாவுடன் சமபல நிலையை எட்ட முனையும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முக்கியமானதாகும்.

சீனா, பாகிஸ்தானிய பாதுகாப்பு ஒப்பந்த உறவுநிலையில் கடந்த பல பத்தாண்டுகளாக உறுதியாக இருந்து வருகிறது. இந்தியாவை கொள்ளடக்கி வைக்கும் திட்டத்தில் பாகிஸ்தானிய ஆயுத பலப் பெருக்கம் முக்கியமான தந்திரோபாயமாக சீனாவுக்குப்படுகிறது.

இதன் அடிப்படையில் சீனா, பாகிஸ்தானுக்கு அணு ஆய்வு தொழில் நுட்பங்களை விற்றது, இராணுவ தளபாட உற்பத்தி மையங்களை விற்றது. சீன தயாரிப்பு,



தாக்குதல் விமானங்களை கொடுத்தது.


ஒரு காலப்பகுதியில் இந்தியாவுடன் மோத வேண்டிய நிலை ஏற்படுமிடத்து மோதற்களத்தை இரு முனைப்பட்டதாக ஆக்கி விடும் சிந்தனை கொண்டது, இந்த உதவிகள் என்பது, இந்திய இராணுவ ஆய்வாளர்கள் கருத்தாகும்.

சீன அரசால் வழங்கப்பட்ட வற்றில் அணு ஆயுத தொழில் நுட்பமும் நீண்ட தூர ஏவுகணை தொழில் நுட்பமும் மிக முக்கியமானதாகும். ஏனெனில் அடிப்படை வாதிகளின் கையில் அணு ஆயுத தொழில் நுட்பமும் அவற்றை கையாளும் சக்தியும் சென்று விடக்கூடாது என்பது குறித்த மேலைத்தேய பாதுகாப்பு ஆய்வாளர்கள் பெரும் கவனம் செலுத்திவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், அணு செறிவுபடுத்தும் தொழில் நுட்பம் 2003 ம் ஆண்டில் பாகிஸ்தானில் கள்ளச்சந்தையில் விற்கப்பட்டதை பாகிஸ்தானிய அணுவிஞ்ஞானி அப்துல் குவாடியர் கான் வெளிப்படுத்தியிருந்தார். இதன் மூலம் பாகிஸ்தானில் அணு தொழில்நுட்ப நடவடிக்கைகள் அமெரிக்காவினால் மிகக் கவனமாக கண்காணிக்கப்பட்டுவருகிறது.

சீனா அமைத்து தரவிருந்த மேலும் இரு அணுசேமிப்பு ஆலைகளை அமெரிக்கா மறுத்திருந்தது. புதிய அணு வழங்கல் கூட்டு நாடுகளில் அங்கம் வகிக்கும் சீனா இந்த முயற்சியை கைவிட வேண்டும் என்பது அமெரிக்காவின் வேண்டுகோளாய் இருந்தது. ஆனால், சீனாவோ அணு சேமிப்பு ஆலைத்திட்டம் 2000ம் ஆண்டு நிறுவகம் பெற்ற அணுவழங்கல் கூட்டு ஆரம்பிக்கப் பட்டதற்கு முன்பே தொடங்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அமைக்கப் படுவதாக கூறிவிட்டது.

ஊழல்கள் நிறைந்த நிர்வாக கட்டமைப்புகள், பொறுப்புகளை உணர்ந்து செயற்பட முடியாத அரசியல் தலைவர்கள், இலகுவாக விலைபோகக்கூடிய விஞ்ஞா



னிகள், அடிப்படையில் மேலைத்தேச எதிர்ப்பு மனோநிலை கொண்ட இஸ்லாமியவாத சமூகக்கட்டமைப்பு என பல்வேறு அம்சங்களை கொண்ட பாகிஸ்தானில், அணு விஞ்ஞானம் ஈரானின் பக்கம் திரும்பி விடுவதற்கோ அல்லது இந்திய மற்றும் மேலைத்தேச எதிர்ப்பு, பணவலு கூடிய பயங்கர வாத கட்டமைப்புகள் கையில் சிக்கி விடுவதற்கோ மிக இலகுவான ஏதுகள் இருக்கின்றன. இந்த நிலைமை இந்திய அமெரிக்க கூட்டு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மிகவும் கரிசனைக்குரிய பகுதியாகும்.

சீனாவை அமெரிக்காவிற்கும் மேலான தனது பாதுகாப்பு நண்பனாக பாகிஸ்தான் கருதுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால், சீனாவோ பொருளாதார ரீதியாக பாகிஸ்தானுக்கு உதவிகளை கட்டுக்குள் வைத்துக்கொண்டு ஆயுத விற்பனைகளை அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் பாகிஸ்தானின் பொருளாதாரத்தில் பொறுப்பு எடுத்து கொள்ள விரும்பாத சீனா, பாகிஸ்தானை இந்திய மேலைதேச நாடுகளின் எதிரியாகவே காண முனைகிறது.

இங்கே ஆய்வாளர்களால் அதிகமாக பேசப்பட்டு வந்த குவாடார் துறைமுக கட்டுமானம் மிக முக்கியமானதாகும். 250 மில்லியன் டொலர் செலவில் முதற்கட்ட வேலைகளில் எண்பது சதவிகிதம் பூர்த்தியாகிய நிலையில் இரண்டாம் கட்ட வேலைக்களுக்கு சீனா மேலும் 500 மில்லியன் டொலர் தேவையென கேட்டதால் பாகிஸ்தான் அரசு சிங்கப்பூர் துறைமுக அதிகார சபையுடன் இந்த துறைமுகத்தை நடாத்துவதற்கான 25 ஆண்டு ஒப்பந்தத்தை செய்துள்ளது.

அதே வேளை இந்த துறை முகத்துடன் தொடர்புடைய வீதிகள், எரிபொருள் எண்ணைக்குழாய்கள் உட்பட துறைமுகத்தை சூழ உள்ள பகுதி, ஏற்றுமதி வலயமாக பிரகடனப்படுத்த வேண்டிய நிலையில் பாதுகாப்பு காரணங்களால் நிலுவையில் உள்ளது.

இந்திய, அமெரிக்க கவனத்திற்கு உட்பட்ட தமது துறைமுக திட்டத்தை முக்கியப்படுத்தும் விதமாக பாகிஸ்தானிய அதிகாரிகள் தாம் சீன கடற்படை முகாம் அமைப்பதற்குரிய அழைப்பை விடுத்துள்ளதாக அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையை சீனா மறுதலித்திருந்தது, பாகிஸ்தானுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்திருந்தது.

தனது உள்நாட்டு கிளர்ச்சிகளில் செல்வாக்கு செலுத்த கூடிய நாடு பாகிஸ்தான் என்பதை நன்கு உணர்ந்த போதிலும் பிராந்திய அனத்துலக நிலைமைகளுக்கு

**நன்றி: இணையம்**

அமைவாக பாகிஸ்தானை கையாள்வதில் சீனா மிகவும் கவனம் செலுத்திவருகிறது.

# காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கு வழங்க மாகாணசபைகள் தீர்மானித்துள்ளன?

## முக்கிய சட்டமூலம் பாராளுமன்றில்

**(கொழும்பு)**

**காணி தொடர்பான அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு மாகாணசபைகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நல்ல நோக்கத்திற்காக காணிகள் பொறுப்பேற்கப்படுவதால் இந்தத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதில் தவறில்லை என மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க மாகாணசபை கட்சித் தலைவர்கள் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,**

**எதிர்வரும் வாரம் மாகாணசபை காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கு வழங்குவது தொடர்பான முக்கிய சட்டமூலமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

இந்த சட்ட மூலத்திற்கு நாட்டின் அநேக மாகாணசபைகள் ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகரமற்றும்நாட்டுத்திட்டம்தொடர்பான உத்தேச சட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னதாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நகர மற்றும் கிராம பகுதிகளில் காணப்படும் காணிகளை மத்திய அரசாங்கம் சுவீகரிக்கக்கூடிய வகையில் இந்தச் சட்ட தயாரிக்கப்பட்டுள்ளது.

சமூக, பொருளாதார, வரலாற்று, சுற்றாடல் அல்லது மதத் தேவைகளுக்காக இவ்வாறு காணிகளை அரசாங்கம் பொறுபேற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்த புதிய சட்டம் தொடர்பில் மேல் மாகாண சபை உள்ளிட்ட மாகாணசபைகள் கலந்தாலோசிக்கத் திட்டமிட்டுள்ளன.

இதே வேளை இந்தச் சட்டத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கூடுதல் பாதிப்புக்களை எதிர் நோக்கும் என ஜனநாயக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகார பகிர்வு குறித்து பேசப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு மாகாண காணி அதிகாரங்களை மத்திய அரசாங்த்திற்கு விட்டுக் கொடுக்கும் வகையில் செயற்படுவது பொருத்தமாகாது என கட்சியின் பொதுச் செயலாளர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் அதிகார பரவாலாக்களுக்குதடையாக அமையும்என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## கொழும்பில் வாகன நெரிசலை குறைக்க சீனாவின் சொகுசுப் பேருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

கொழும்பு வீதிகளில் வாகன நெருக்கடியைக்குறைக்கும் நோக்கில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு பேருந்துகள் இந்தமாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தனியார் வாகனங்கள் காரணமாக கொழும்பில் வாகன நெரிசல் ஏற்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக மொரட்டுவ-புறக்கோட்டை, நீர்கொழும்பு- புறக்கோட்டை, கம்பஹா- புறக்கோட்டை, கெஸ்பாவ- புறக்கோட்டை,ஹோமாகம- புறக்கோட்டை ஆகிய இடங்களில் இந்தப் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. ஏற்கனவே இவ்வாறான சேவைகள் மொரட்டுவ- புறக்கோட்டை வீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

## கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞன் பலியானான்

(கொழும்பு)

கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞன் ஒருவன் பரிதாபமாக பலியான சம்பவமொன்று வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்விஸ்டவுண் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அல்விஸ் டவுண் பகுதியிலுள்ள தனியார் நிறுவனமொன்றின் ஊழியர்கள் சிலரிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தின் போதே ஹெந்தளை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய பீ.ஏ.துமிந்த கயான் என்பவரே பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் குறித்த நிறுவனத்தின் 4 ஊழியர்களிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு உச்ச நிலையை அடையவே கத்திக்குத்து பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)





வெள்ளவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொதுச்சந்தை மற்றும் நான்கு மாடி வாகன தரிப்பிடம் ஆகியன நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை திறந்துவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் திறந்து வைக்கர்பட்ட கட்டத்தையும் சந்தையையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பு மேஜர் ஏ.ஜெ.எம். முஸம்மில் மற்றும் கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சி தலைவர் மிலிந்த மொரகொட உள்ளிட்ட பலர் பார்வையிடுவதை படங்களில் காணலாம்.

## நிர்வாகத்தெரிவு

சுதுமலைவடக்கு (ஜே/129) இளைஞர் கழக 2012ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவர் ச.செந்தில்குமரன், செயலாளர் பே.சுபாகரன், பொருளாளர்சி.விஜிதா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக உறுப்பினர் தெரிவித்துள்ளார். (அ)

## பயங்கரவாதத்தை முடிவுறுத்தும் செயற்பாட்டை குற்றமென கூறமுடியாது

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

ஜெனீவாவில் மார்ச்மாதம் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டுக்கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்படும் எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாக அரசாங்கம் வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்கவுள்ள இலங்கைக் குழுவினர் தயார் நிலையிலுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள மனித உரிமைகள் மகாநாட்டிலேயே ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக முன் மொழிவொன்றினை கொண்டுவரவுள்ளதாக அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

இலங்கைஅரசாங்கத்திற்குஎதிராக மேற்குலக நாடுகள் கொண்டுவரும் எந்தவொரு முன்மொழிவுகளுக்கும் அச்சமின்றி பதிலளிக்க தயாராக உள்ளதாகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

3 தசாப்தங்களாக இலங்கையில் இடம்பெற்றுவந்த பயங்கரவாத செயற்பாடுகளை வெற்றிகரமான முறையில் முடிவுக்கு கொண்டு வந்து முழு உலகிற்கும் முன்மாதிரியாக விளங்கியதாகவும் அவர் மேலும் கூறினார்.

பயங்கரவாதத்தை முடிவுறுத்தும் செயற்பாடானது ஒரு குற்றம் அல்ல எனவும் அது அனைவராலும் பாராட்டதக்கவிடயம் எனவும் கருணாதிலக அமுனுகம சுட்டிக்காட்டினார்.

மனிதஉரிமைமகாநாட்டின்போது தேவையான சந்தர்ப்பங்களில் புள்ளி விபரங்களுடன் வினாக்களுக்கு பதிலளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சிறைச்சாலை கலவர ஒளிப்பதிவுகளை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு

மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தின் போது பிடிக்கப்பட்ட வீடியோ ஒளிப்பதிவுகளின் திருத்தப்படாத காட்சிகளை கொழும்பு குற்றவியல் பிரிவினருக்கு வழங்குமாறு அரசமற்றும்தனியார்தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளையடுத்து நீதவான் பிரஹர்ஷா ரணசிங்க உத்தரவை விடுத்துள்ளார்.

இதேவேளை மேற்படி கலவரத்தின்போது சொத்துக்களை சேதப்படுத்திய 47 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாககொழும்பு பிரதம நீதவானிடம் கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மகசின் சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக எம்மில் ரஞ்சன் லமாஹேவா நியமிக்கப்பட்டதுடன் கைதிகள் விரும்பாத சில நிர்வாக மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டதாக கொழும்பு குற்றவியல் பிரிவு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியட்சகர் லமாஹேவை சந்திப்பதற்கு கைதிகள் அனுமதிகோரியுள்ளதாகவும் இதற்கு அவர் மறுத்ததையடுத்து கைதிகளால் கலவரம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கலவரத்தின்போது 5 அதிகாரிகளும் 26 கைதிகளும் காயமடைந்துள்ளதாகவும் ரி-56 ரக துப்பாக்கியின் 6 தோட்டாக்களை தாம் கைப்பற்றியதாகவும் கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-2)

# பாடசாலைகளில் விஞ்ஞான,வர்த்தக பிரிவுகளை மேலும் வலுப்படுத்த கல்வியமைச்சு தீர்மானம்

## மனிதவள தேவைக்கேற்ப கல்வி முறையில் மாற்றம் என்கிறார் பந்துல

(கொழும்பு)

மனிதவளத் தேவைகளுக்கமைய மாணவர்கள்ள எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் தயார்படுத்துவதற்காக க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தக மற்றும் விஞ்ஞானப் பிரிவை மேலும் வலுப்படுத்த தீர்மானித்திருப்பதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மூநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கல்வி முறையில் ஏற்படுத்தப்படவிருக்கும் திருப்புமுனை தொடர்பில் அமைச்சின் கீழ் பேராசிரியர்கள், புத்திஜீவிகள் உள்ளடங்கிய குழுவொன்று தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றது.

இவர்கள் தமது ஆய்வின் அடிப்படையிலான அறிக்கையினை எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பரெனவும் அமைச்சர் கூறினார்.

தரம் ஒன்றில் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களில் 22 சதவீத மானவர்களே க.பொ.த. உயர்தரத்திற்கு தோற்றுகின்றனர். இவர்களில் நாடளாவிய ரீதியில் 25 சதவீதமான மாணவர்களே வணிகத்துறையினைத் தெரிவு செய்வதுடன் 53 சதவீதமான மாணவர்கள் கலைத் துறையினை நாடுகின்றனர்.

அதற்கு பிரதான காரணம் பாடசாலைகளில் போதிய வளம் மற்றும் ஆசிரியர்கள் இல்லாமையே.

க.பொ.த. உயர்தரத்தில் அனைத்துப் பிரிவினையும் தெரிவு செய்யப்படக்கூடிய பாடசாலைகள் 72 மாத்திரமேயுள்ளன. இவற்றை நாம் 1 ஏபி பாடசாலைகளென வகுத்துள்ளோம்.

இதேநிலை தொடருமாயின் நாட்டின் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து ஒருபோதும் வைத்தியரோ, பொறியியலாளரோ, கட்டடக்கலை நிர்மாணியோ, கணக்காளரோ உருவாக முடியாது.

இன்று தாதியர் தெரிவுக்கு கூட விஞ்ஞானத்துறையை சேர்ந்த மாணவர்கள் இல்லாமையினால் கலை மற்றும் வணிக பிரிவில் உயர்தரம் கற்ற மாணவர்களை தாதியர்களாக இணைத்துக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகள் மற்றும் ஆயிரம் பாடசாலைகளை இரண்டாம் நிலைப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தை ஆரம்பித்துள்ளாரெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இச்செயற்றிட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் அநுராதபுரம் வலிசிங்க ஹரிச்சந்திர வித்தியாலயத்தை•ஜனாதிபதி நாளை கல்வி நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கவுள்ளார்.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப் பட்டதற்கு அமைய பிரதேச செயலகங்கள் தோறுமுள்ள 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் ஆயிரம் பாடசாலைகள் இரண்டாம் நிலைப்பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டு வருகின்றன.



இந்த ஆயிரம் பாடசாலைகளுக்கும் தலா 40 தொடக்கம் 50 கணனிகள், நவீன தொழில் நுட்பங்கள், வணிககூடம், இரசாயன கூடம், பௌதீகவியல் கூடம், நூலகம், விளையாட்டு மைதானம், கலைக்கூடம், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த அபிவிருத்திக்காக பாடசாலை ஒன்றிற்கு தலா ஆறரைக்கோடி ரூபா வரை செலவு செய்யப்படுகின்றன.

இப்பாடசாலைகளுக்கு 3 ஆயிரம் ஆசிரியர்களும் 500 அதிபர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதிககாலம் தேசிய பாடசாலைகளில் கற்பித்துவரும் ஆசிரியர்களும் மாகாணசபை பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் இடமாற்றங்களை வழங்குவது தொடர்பிலும் நாம் ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, கொய்க்கா, ஜெய்கா, யுனிசெப் ஆகியனவும் நிதியுதவிகளை வழங்கியுள்ளன. (அ-2)

# மனித தோலில் இருந்து மூளை செல் கண்டுபிடிப்பு

## கலிபோர்னிய விஞ்ஞானிகள் தெரிவிப்பு



(கலிபோர்னியா)

மனிதன் மூளையில் பாதிப்பு ஏற்பட்டால் அதை சரிப்படுத்துவது மிகவும் கடினமாகும். ஆனால் புதிய கண்டுபிடிப்பு ஒன்று இதற்கு தீர்வு ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

மூளையில் உள்ள செல்கள் பாதிக்கப்படும் போது அதற்கு பதிலாக புதிய செல்களை உருவாக்கி அதில் பொருத்தினால் பாதிப்பை சரி செய்து விடலாம். ஆனால் இதுவரை மூளை செல்களை எப்படி உருவாக்க முடியும் என்பதை கண்டு பிடிக்காமல் இருந்தனர். ஆனால் அமெரிக்க கலிபோர்னியாவில் உள்ள ஸ்டாண்ட்போர்ட்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மனித தோலில் இருந்து மூளை செல்களை உருவாக்க முடியும் என்று கண்டுபிடித்து உள்ளனர்.

எலியில் இருந்து இதுபோன்ற மூளை செல்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர். இதேபோல மனிதமூளை செல்களையும் உருவாக்க முடியும் என்று கண்டுபிடித்து உள்ளனர். இதன்மூலம் பக்கவாத நோய் மற்றும் மூளையால் ஏற்படும் பார்வை இழப்பை தடுக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (அ-2)

# திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் வைத்திய நிறுவனங்களுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண் காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்கண்காணிப்புக்குழுக்கூட்டமானது நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்து பிற்போடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7)

# தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்

## தேசிய மொழிகள் திணைக்களம் அறிவிப்பு

அநுராதபுரத்தில் சுதந்திர தினத்துக்குப் பின்னர் இடம்பெறுகின்ற தேசத்தின் மகுடம் கண்காட்சியில் சிங்கள, தமிழ் மொழி தொடர்பிலான புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படும் என்று தேசிய மொழிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரச மொழித் திணைக்களத்தின் புத்தக விற்பனை கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு திணைக்களத்தினால் அச்சடிக்கப்படுகின்ற சகல புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

கண்காட்சி நடைபெறும் காலத்தில் அரச மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற சகல மொழி தொடர்பிலான பாடங்களை இணையத்தளத்தின் ஊடாக பார்வையிட முடியும். அத்துடன் முதலாம் தரத்திலிருந்து ஐந்தாம்தரம் வரையிலான பாடசாலை மாணவர்களுக்கு நாங்கள் சிங்களம், தமிழ்மொழிகளை கற்போம் என்ற புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

பாடத்திட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தை மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். (அ-2)


# மூன்றாம் ஆண்டு நீங்கா நினைவு

பிறப்பு 22 . 06 . 1951



இறப்பு 04 . 02 . 2009

அமரர் திருமதி வல்லிபுரம் தங்கமலர் (மலர்)

திதி:- 02.02.2012

பார்க்கும் இடமெங்கும் உங்கள் விம்பம் அம்மா
கேட்கும் ஒலிகள் எல்லாம் உங்கள் குரல் அம்மா
ஒளியேற்றி வரவேற்று அரவணைத்த அன்னையே
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் ஆறாது எம் துயரம்


கொடுக்குளாய் வீதி,
ஆழியவளை,
தாளையடி.

(சி-5755)

தகவல்:-
குடும்பத்தினர்

# கிழக்கு மாகாண சபையின் காலம் கடந்த ஞானம்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்கின்ற தீர்மா னம் மாகாண சபை உருவாக்கப்பட்டு 3 வருடங்கள் முடிந்த நிலையிலேயே அவர்களுக்கு ஞானம் பிறந்திருக்கின்றது என கூட்டமைப்பின் பா.உ.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டிப்பளை மட்/வால்கட்டு தமிழ் கலவன் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தமிழ்தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் வடகிழக்கு இணைந்த ஒரு தாயகத்தில் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் சுய நிர்ணய உரிமையுடனும் வாழக்கூடிய காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரத்துடன் கூடிய ஒரு தீர்வையே நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால், இப்போதுதான் கிழக்கு மாகாண சபையில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்கின்ற தீர்மானத்தை கிழக்கு மாகாணசபையில் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றனர்.

கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று வருடங்கள் முடிந்து அடுத்த தேர்தலை எதிர்நோக்கியிருக்கின்ற வேளையில் தான் அவர்களுக்கு இந்த ஞானம் பிறந்திருக்கின்றது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக கூறிவரும் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய தீர்வை இப்போது பலர் அதனை உணர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியென்பதை புரிந்திருக்கின்றனர்.

இதனை இப்போது கிழக்கு மாகாண சபையும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் அது குறித்து ஏகமனதான ஒரு தீர்மானத்தையும் நிறை வேற்றியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டத்திற்கு 18 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா கிடைத்தது

## அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு பல்வேறு அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டங்களுக்காக 18 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா நிதி கிடைத்துள்ளதாக முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் பி.றீட் நித்தியானந்தன் குலாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ வேலைத் திட்டம், முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ முடிவுறும் வேலைத்திட்டங்கள், பிரதேச அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டங்கள் ஆகியவற்றுக்காக 2 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் கிராமமட்டத்திலான வேலைத்திட்டங்களுக்காக ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் வெலி ஓயா கிராமங்களுக்கான அனர்த்த முகாமைத்துவ வேலைத் திட்டங்களுக்காக 15 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# பிரித்தானிய தூதரக அதிகாரி களுத்துறை சிறைக்கு விஜயம்

## தற்போதைய நிலை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியிலுள்ள களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பிரித்தானிய தூதரகத்தின் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் அவர்களுடைய தற்போதைய நிலைமை தொடர்பாகவும் கேட்டறிந்துள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானியத் தூதரக அதிகாரியான ஜோர்ஜ் நீல் என்பவரே சிறைச்சாலைக்கு விஜயம் செய்தவராவார்.

புதிய மகசின் சிறைச்சாலையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மோதலை அடுத்து 192 தமிழ் அரசியல் கைதிகள் அங்கிருந்து களுத்துறைசிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். இவர்களையே சந்தித்து அவர்களுடைய தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்துள்ளார்.

புதிய மகசின் சிறைச்சாலையில் எமது உடைமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன. களுத்துறை சிறையில் ஆயிரத்து 800 சிங்கள கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடனேயே நாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். இதனால் எமக்கு பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகின்றது.

எனவே, இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி எம்மை பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் இச்சந்திப்பின் போது பிரித்தானியத் தூதரக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரித்தானிய பிரஜைகள் இருவரையும் இலங்கைக்கான பிரித்தானிய தூதரக அதிகாரி சந்தித்து பேசியுள்ளார்.

அதேவேளை, இலங்கை சிறைச்சாலையில் மூன்றரை வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 55 வயதான தேவதாசன் கனகசபை தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த 27 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

******

யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு அவரது வடமராட்சி கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் கலந்து கொள்வார். பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி என்.ஜமுனா நந்தகுமார் பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ)

# ஐக்கிய நாடுகள் வதிவிடத்திட்டத்தினால் 3 ஆயிரத்து 785 வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேறிவரும் மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தினை மேற்கொண்டு வரும் ஐக்கிய நாடுகள் வதிவிடத் திட்டமானது யூ.என்.கபிடட் கடந்த திங்கட்கிழமை வவுனியா வடக்கு கனகராயன்குளத்தில் பயனாளிகளிடம் வீடுகளை கையளித்துள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரினால் வீடுகள் திறந்து வைக்கப்பட்டு வீடுகளுக்கான ஆவணங்கள் வீட்டின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனகராயன்குளம் வடக்கில் 60 வீடுகளை அமைக்கும் பணிகளை மேற்கொண்டிருக்கும்கபிடட்நிறுவனமானது கடந்த திட்ட ஆண்டில் 3 ஆயிரத்து 785 வீடுகளை அமைத்து பயனாளிகளிடம் கையளித்திருந்ததுடன் நடைபெற்று வரும் திட்ட ஆண்டில் 4 ஆயிரத்து600வீடுகளைவவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 514 கிராமசேவகர் பிரிவில் அமைத்து வருகின்றது.

மக்களை சமூக மட்டத்தில் இருந்து வலுவூட்டல் செயற்பாட்டின் மூலம் பயனாளிகளின் பங்களிப்புடன் செயற்படுத்தி வரும் வீடமைப்புத் திட்டமானது அரச திணைக்களங்களின்அனுமதியுடன்இணைச் செயற்பாடாக வீடுகளை அமைத்து வருகின்றது.

இதேவேளை, இவ்வீடமைப்புத் திட்டங்கள் யூ.எஸ்.எயிட், ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் செல்லையா -வள்ளியம்மை



குஞ்சர்கடை, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த செல்லையா -வள்ளியம்மை அவர்கள் கடந்த 30.01.2012 ஆம் திகதி திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி -செல்லையா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் சிலம்பு-கந்தப்பு(முன்னாள் அதிபர், நயினாதீவு மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மகளும், அமரர்களான சின்னத் தம்பி- சின்னப்பிள்ளையின் மருமகளும், லிங்கமூர்த்தி, விசாக மூர்த்தி, தவமணிதேவி, சாரதாதேவி, சுந்தரமூர்த்தி (முன்னாள் தவிசாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை) ஆகியோரின் அருமைத் தாயாரும் நகுலேஸ்வரி, சியாமளா, சிவானந்தா, குணேந்திரசீலன் ஆகியோரது பாசமிகு மாமியாரும்,கஜன், வாசன், தனுஜா, சஞ்சீவி, உஷானி, வாகீசன், சக்தீசன், அஜந்தன், அனோஜன், ஐங்கரன் ஆகியோரது அருமை பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 02.02.2012 ஆம் திகதி (வியாழக்கிழமை) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள் ளவும்.**

செல்லையா- சுந்தரமூர்த்தி
குஞ்சர் கடை,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

தொ.பே:-0714032130 (6239)

## அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப உலகின் உணவு இருப்பு இருப்பதில்லை

### ஐக்கிய நாடுகள் சபை தகவல்

உலகில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவின் இருப்பு இல்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்கள் திட்ட அமுலாக்கத்துக்கு இடையிலும் உலக மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகின்றது. வளரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி முன்னேறியுள்ள நிலையிலும் மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன. மக்கள் தொகைக்கு ஏற்ப உலகின் உணவு இருப்பு இருப்பதில்லை.

அதாவது இன்றைய மக்கள் தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி, கையிருப்பு ஆகியவை தற்காலிகமானவை. ஆனால் உணவு உற்பத்தியில் நீடித்த நிலைத்தன்மையுடன் வளர்ச்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கிடைக்கவில்லை.

இப்போதைய உலக வளர்ச்சி முறை நிலையற்றதன்மை கொண்டதாக இருக்கின்றது. அதிலிருந்து மாற சர்வதேச பொருளாதாரத்தில் மிகப் பெரிய மாற்றம் தேவைப்படுகின்றது. இப்போது உலகின் பல பகுதிகளில் நிலவும் பொருளாதார பிரச்சினைகள் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் உடனடியாக தொடங்க சிறந்த வாய்ப்பை அளித்துள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வசித்தவர்கள் எண்ணிக்கை 46 சதவீதமாக இருந்தது. அது இப்போது 27 சதவீதமாக குறைந்துள்ள போதிலும் நிலையான உணவு பாதுகாப்பை உறுதி செய்யாமல் இதை தக்க வைக்கவோ மேலும் குறைக்கவோ முடியாது. (அ-2)

## வடகொரியாவிடமிருந்து ஆயுதங்கள் வாங்கவில்லை– மியன்மார் மறுப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்ன் வடகொரியாவிடம் இருந்து அணு ஆயுதங்கள் வாங்க மியன்மார் முயன்றதாக வெளியான தகவல்களை மறுத்துள்ளார்.

வடகொரியாவும் ஈரானும் அனுமதியின்றி அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்த நாடுகள் பாகிஸ்தான், மியன்மார் நாடுகளுக்கு அணு ஆயுத தொழில்நுட்பங்களை இரகசியமாக கடத்தியதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்தாண்டின் மத்தியில் இராணுவ ஆட்சியில் இருந்து விலகிய மியன்மார் ஜனநாயக பாதையில் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றது. நாட்டில் ஜனநாயகத்தை வளர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கி நாட்டில் அந்நிய முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்பதில் தெய்ன் செய்ன் உறுதியாக உள்ளார்.

இந்நிலையில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள அவர் வடகொரியாவிடம் இருந்து எவ்வித அணு ஆயுதங்களையும் நாங்கள் வாங்கவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. சந்தேகத்தின் அடிப்படையில் சில மேற்குலக நாடுகள் இந்தக் குற்றச்சாட்டை கூறி வருகின்றன என்றார்.



கடந்தாண்டு டிசெம்பரில் மியன்மார் சென்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அமெரிக்கா உடனான தனது உறவை மியன்மார் வலுப்படுத்த வேண்டுமானால் வடகொரியா உடனான இரகசிய உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார் என்பது குறிப்பிடத்



வங்கதேச நாட்டில் அரசுக்கெதிராக எதிர்க்கட்சியினர் (வங்கதேச தேசியக் கட்சி) தலைநகர் டாக்கா நகரில் மெகா பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

## கச்சா எண்ணெயை நிறுத்தியது ஈரான்; வளைகுடா நாடுகளுக்கு அமெரிக்கா தூது

(சியோல்)

கச்சா எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக அமெரிக்கா வளைகுடா நாடுகளுக்கு தென் கொரியாவை தூது அனுப்பியுள்ளது.

உலகிலேயே அதிகமாக பெற்றோல் பொருட்களை பயன்படுத்தும் நாடு அமெரிக்கா தான். ஏகப்பட்ட கச்சா எண்ணெய் இருப்பில் வைத்திருக்கும் நாடும் அதுவே தான். ஆனாலும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு உலகின் பெற்றோலிய பொருட்களை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது தனது முதல் பணி என்று அமெரிக்கா கருதுகின்றது.

எந்த நாடாக இருந்தாலும் தனது முக்கிய வேலைகளுக்கு உடன்படாவிட்டால் மக்கள் புரட்சி என்ற பெயரில் அந்நாட்டிற்கு எதிராக கலவரங்களை உண்டாக்குவது அமெரிக்காவின் பணி. வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை அனைத்தும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டன.

இப்போது அதற்கு தலைவலியாக இருப்பது ஈரான் நாடு மட்டுமே. ஈராக்கிற்குள் புகுந்தது போல் அத்தனை சுலபமாக இங்கு அமெரிக்காவால் நுழைய முடியவில்லை. காரணம் அங்கே ஓரளவு மக்களாட்சி தான் நடக்கிறது.

தென்கொரிய ஜனாதிபதி லீ மியாங் பாக் திடீரென மத்திய கிழக்கு நாடுகளில் அவசர சுற்றுப்பயணத்தை அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் அவர் சவுதி அரேபியா, கட்டார், அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஈரானில் இருந்து முற்றிலுமாக கச்சா எண்ணெய் நின்றுவிட்டால் பற்றாக் குறையை சமாளிக்க ஏனைய நாடுகள் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கவே அவர் இந்த பயணத்தை மேற்கொள்கிறார் என்று கூறப்படுகின்றது. (அ-2)

## மியன்மார் ஜனநாயகத்தலைவர் ஆங்சாங் சூகிக்கு டாக்டர் பட்டம்



மியன்மார் நாட்டின் ஜனநாயக தலைவர் ஆங்சாங் சூகிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஜாமியா மிலியா பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

மியன்மார் நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்த இராணுவ ஆட்சிக்கு எதிராக ஆங்சாங் சூகி பல ஆண்டுகளாக போராடி வருகின்றார்.

அவரது போராட்டத்தின் பலனாக மியன்மாரில் விரைவில் தேர்தல் நடக்க உள்ளது. இதற்கான பிரசாரத்தில் சூகி தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அத்துடன் மியன்மாரில் ஜனநாயகம் மலரவும் மனித உரிமைகளை காப்பாற்றவும் அவர் நடத்திய போராட்டத்தை பாராட்டி அவருக்கு 1991 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் ஜாமியா மிலியா பல்கலைக்கழக துணை வேந்தர் நஜீப் ஜங் கூறுகையில்,

மியன்மாரில் ஜனநாயகம் மலர போராடிய ஆங் சாங்சூகியை பாராட்டி கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று மக்களுக்காக போராடுபவர்களை பாராட்டி டாக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது என்றார். (அ-2)

## உலக தரிசனம்

## தென்சூடானில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல்; 79 பேர் உயிரிழப்பு

(ஜுபா)

சூடான் நாட்டில் இருந்து தெற்கு சூடான் கடந்த ஜூலை மாதம் தனி நாடாக பிரிந்தது. இதன்பின்னரும் இரு நாடுகள் இடையே அடிக்கடி பிரச்சினை மூண்டு வருகின்றது.

இந்நிலையில் தெற்கு சூடான் பகுதியில் உள்ள கால்நடை பண்ணைக்குள் பயங்கரவாத கும்பல் துப்பாக்கிகளுடன் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டனர். இதில் 79 பேர் பலியானார்கள். மேலும் பலர் காயம் அடைந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட கும்பல் ஏராளமான கால்நடைகளையும் கடத்திச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சூடான்தான் காரணம் என்று தெற்கு சூடான் உள்துறை மந்திரி அலிசன் மனானிமகயா குற்றம் சாட்டினார். பயங்கரவாதிகளுக்கு ஆயுதம் கொடுத்து அப்பாவி மக்களை கொல்ல தூண்டிவிடுகிறார்கள் என்று புகார் தெரிவித்தார். ஆனால் இந்த தாக்குதலுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என சூடான் இராணுவ செய்தி தொடர்பாளர் சவார்மி காலிசாத் மறுத்தார். (அ-2)

## மனித குண்டுவெடிப்பில் ஒன்பது பேர் பலியாகினர்

### பாகிஸ்தானில் துயரம்



(லாகூர்)

பாகிஸ்தானில் மனித வெடிகுண்டு வெடித்ததில் 9 பேர் பலியானார்கள். 13 பேர் காயமடைந்தனர். பாகிஸ்தானில் பெஷாவர் பகுதியில் உள்ளபாககுலாம் என்ற இடத்தைச் சேர்ந்த பழங்குடி தலைவர்காஜிஅகோன் சதா. இவர் தனது வீட்டின் முன்பு அமர்ந்து தனது ஆதரவாளர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது உடலில் வெடிகுண்டை கட்டிவந்த வாலிபர் அவர் அருகே வந்ததும் குண்டை வெடிக்கச் செய்தார்.

இதில் அகோன்சதா மற்றும் அவரது உறவினர்கள், நண்பர்கள் உட்பட 9 பேர் பலியானார்கள்.

13 பேர் படுகாயம் அடைந்தனர். அவரை கொன்றவர்கள் எந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை. அன்சார் உல் இஸ்லாம் என்ற அமைப்புடன் பலியான சதாவுக்கு மோதல் போக்கு இருந்தது என்று கூறப்படு கின்றது.

எனவே அந்த இயக்கத்தினர் அவரை கொலை செய்திருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. (அ-2)

நரி தன் கனவில்கூட; கோழிகளை எண்ணிக் கொண்டே இருக்கும். ~ வாலஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையில் சீனாவின் பிரசன்னம் வர்த்தக நோக்கம் கொண்டதே

## அரசியல் நோக்கம் எதுவுமில்லை என்கிறார் மகிந்த

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருவதாக குற்றஞ் சாட்டப்படுகின்றது. ஆனால் இங்கு சீனாவின் இருப்பு கண்டிப்பாக வர்த்தக நோக்கத்தை மட்டுமே கொண்டதாகவுள்ளது. இதில் அரசியல் நோக்கங்கள் எதுவுமில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் அவரது செயலகமான அலரி மாளிகையில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் தென் கரையோரப் பகுதியில் துறைமுகத்துக்காக 1.4 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்திருப்பதன் மூலம் இந்தியாவின் கொல்லைப் புறத்தில் சீனா உள்நுழைந்திருக்கின்றது என ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்த கருத்தை மறுத்தார். இது தொடர்பில் இந்தியா எந்தவிதமான முறைப்பாட்டையும் செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

எமக்கு யாரும் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ கூட எதனையும் தெரிவிக்கவில்லை.

தற்போது அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகள் தமது நாடுகளில் வந்து முதலீடு செய்யுமாறு சீனாவை அழைக்கின்றன எனவும் தெரிவித்தார்.

இலங்கையை பொறுத்தவரையில் இங்கு சீனாவின் பிரசன்னம் வர்த்தக நோக்கத்தை மட்டுமே அடிப்படையாக கொண்டது. இதில் அரசியல் நோக்கங்கள் எதுவுமில்லை எனவும் ஜனாதிபதி கூறினார். இதேவேளையில் இது தொடர் பாக கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய இராஜதந்திரி ஒருவர் இன்று இந்தியா வும் சீனாவும் இலங்கையில் முதலீடு களை மேற்கொள்ளுகின்றன. ஒன்றை யொன்று சமப்படுத்தும் வகையில் மகி ந்தவின் செயற்பாடுகள் உள்ளன. நாட் டின் ஒரு பகுதியில் அனல் மின் திட்ட த்தில் சீனா முதலீடு செய்கிறது. மறு பகுதியில் இந்தியா முதலீடு செய்கிறது. தென் பகுதியில் உள்ள துறைமுகம் ஒன்றை சீனா அபிவிருத்தி செய்கிறது. வடபகுதியிலுள்ள துறைமுகம் ஒன்று இந்தியாவால் அபிவிருத்தி செய்யப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தோற்றபோதில்லாப் பெருந்துயரை ஜனாதிபதியின் கூற்றினால் புலிகள் அடைந்திருப்பர்!

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் போல நடந்துகொள்கின்றனர். இவ்வாறு இந்த நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறி வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் போல நடந்து கொள்கின்றனர் என்று ஜனாதிபதி கூறுவதானது ஒரு திட்டமிட்ட ஒழுங்கில் இரு இன மக்களை ஏமாற்றும் செயல் என்று உணர முடியும்.

விடுதலைப்புலிகள் தங்கள் அமைப்பை நடத்திய முறை, இலங்கை அரசுடன் வெளிநாடுகளில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சமபல பராக்கிரமத்துடன் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் மக்கள் தெளிவான தகவலைப் பெற்றுள்ளனர்.

சிலவேளைகளில் அரசின் பார்வையில் விடுதலைப்புலிகள் இறுக்கமான போக்கை கொண்டிருந்ததாகத் தென்பட்டிருக்கலாம்.

ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் இறங்கி - விட்டுக் கொடுத்து பேச்சுவார்த்தையை தொடர முடியுமோ அந்தளவிற்கு அவர்கள் இறங்கியுள்ளனர்.

சுருங்கக்கூறின், விடுதலைப்புலிகள் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூடு கட்டப்பட்டாலும்,

போருக்குப் பின்பான அந்தக் கூட்டில் புலிகள் அறவேயில்லை. அங்கு மான்களும் மற்றும் சிலவுமே இருக்கின்றன.

மான்களில் கூட கவரி மான்களும் இல்லை, வெறும் புள்ளிமான்கள்தான்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு புலிகள் போல நடந்து கொள்கின்றனர் என ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறியிருப்பது ஆச்சரியம் தருவதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் போலச் செயற்படுகின்றனர் என ஜனாதிபதி கூறுவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தனக்கான ஒரு ஆதரவைப் பெற அவர் எத்தனித்திருக்கலாம் என்பதுடன் தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள மக்களின் வெறுப்பு நிலையை நீடிக்கவும் செய்யலாம். இது அவர் பக்கம் சார்ந்தது.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் போல நடந்து கொள்கின்றனர் என ஜனாதிபதி கூறும்போது, அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கை - அவர்களுக்கான ஆதரவை ஈழத் தமிழர் மத்தியிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் அதிகரிக்கச் செய்யும் என்பது திண்ணம்.

அட! என்னதான் சொன்னாலும் எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் போல நடந்து கொள்கின்றனர். சம்பந்தன் ஐயா இந்த வயதிலும் இறுக்கமாக நிற்கிறார் என்று புளகாங்கிதம் அடைவர்.

இந்த உண்மை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கோ அன்றி அவரின் ஆலோசகர்களுக்கோ தெரியாததல்ல.

அப்படியிருந்தும் ஜனாதிபதி திரும்பத் திரும்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் போல் நடந்து கொள்கின்றது என ஏன் கூறுகிறார்?

எதைக் கதைத்தாலும் அந்தக் கதை சிங்கள இனத்திற்கு மட்டுமே நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்பதில் தெளிந்த சிந்தனையுடைய ஆட்சியாளர்கள், புலிகளின் இறுக்கமான கொள்கையின் பக்கத்தாலும் செல்லாத வர்களைப் பார்த்து 'புலிகள் போல' என்று கூறுவதில் ஏதோ மர்மம் இருக்கவே செய்கின்றது.

ராஜபக்ஷவின் நினைவு தினத்தில் கலந்து கொண்ட சம்பந்தர் ஐயா, அரசு மீதான போர்க்குற்ற விசாரணை அவசியமில்லை என்று உரையாற்றிய சுமந்திரப் பெரியோன் இருக்கின்ற இடத்தைப் பார்த்தா? புலி போல என்று கூறுவது?

சிவசிவா! புலிகள் இதைக் கேட்டால் போரில் அடைந்த துன்பத்தை விட பெருந்துன்பம் அடைவர்.

# துமிந்த சுயநினைவின்றி இருப்பதால் அவரது சட்டத்தரணி ஆஜராக முடியாது

## நீதிமன்றம் அறிவிப்பு

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான நீதவான் விசாரணைகளின்போது பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ண குலசூரிய ஆஜராக முடியாதென நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

சம்பவம் தொடர்பிலான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

துமிந்த சில்வா சுயநினைவின்றி இருப்பதாக நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட 2 மருத்துவ அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக மேலதிக நீதவான் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான நிலைமையில் சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரியவினால் அவரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது எனவும் மேலதிக நீதவான் நேற்றைய தினம் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் துமிந்த சில்வாவின் உறவினர்களது ஆலோசனைக்கு ஏற்ப சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய ஆஜராகுவதாக நீதிமன்றத்திற்கு இதுவரை எழுத்துமூலம் அறிவிக்கவில்லை எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய நிலைமையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய ஆஜராவதால் சந்தேக நபருக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் மேலதிக நீதவான் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய தடயங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கூறினார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 16சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டார்.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய காமினி பெரேரா என்பவருக்கு பிணை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் நீதிமன்றம் அதனை நிராகரித்தது. (அ-2)

# மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம் கமக்காரர்களை உதவக்கோருகிறது

(கிளிநொச்சி)

மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம் 306 ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்து வருகின்றது. இதில் கொடிய போரினால் பாதிக்கப்பட்ட தாய், தந்தையரை முற்றாக இழந்தவர்களும் இருவரில் ஒருவரை இழந்த குழந்தைகளுமே பராமரிக்கப்பட்டு கல்வியூட்டப்பட்டு வருகின்றார்கள்.

இந்தக் குழந்தைகளினைப் பராமரிப்பதற்கு போதிய வசதியின்மை காரணமாகவே கமநல அமைப்புக்களிடம் சகல கமக்காரர்களையும் ஒரு மூடை நெல்லினை தந்துதவுமாறு கிளி/மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத் தலைவர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.

இல்லத்தில் 100 பிள்ளைகளை பராமரிப்பதற்கே இதுவரை பெறப் பட்ட உதவிகள் போதுமானதாக இருந் தது. தற்போது குழந்தைகள் எண் ணிக்கை அதிகரித்துள்ளமையால் இந் நிதி நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இங்கு இரண்டு வயது தொடக்கம் பதினாறு வயது வரையானவர்களே பராமரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பணியானது இந்த நிறுவனத்துக்கு மட்டும் உரிய பணியல்ல. எமது சமூகத்திலுள்ள அனைத்து நல்ல உள்ளங்களும் முன்வந்து உதவவேண்டும் எனவும் இவர்களை பராமரிக்காது, கல்வி அறிவினை கொடுக்காது விடப்படும்போது சமூக சீர்கேடுகள் ஏற்பட இடமளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-7-84)

# மல்லாவி ம. கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி

துணுக்காய் கல்வி வலயத்திற் குட்பட்ட மு/மல்லாவி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன், சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் சி.குணபாலன், துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3,15)

# சத்திய தரிசனம்



## புண்ணியமே சிறந்த பாதுகாப்பு

கற்களில் செதுக்கப்பட்ட சிலைகளில் கடவுளைக் காண வேண்டும். கடவுளைக் கல்லாக்க முயலக் கூடாது.

சூரியனை பார்க்க விளக்கை எடுத்துச் செல்வ தில்லை. அதன் ஒளியிலேயே சூரியனை பார்க்கி றோம். அதுபோல, கடவுளைக் காண பிற சாதனங் களைவிட அருள்தான் தேவை.

பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக்கூடாது. நெஞ் சிலிருந்து வரவேண்டும். அதுவும் தனக்காகச் செய்யப் படாமல் பிறருக்காகச் செய்யப்பட வேண்டும்.

கண்பார்வையும், கண்களும் சுற்றியுள்ள பொருளை பார்ப்பதற்காக மட்டுமல்ல. இறைவனைக் காண்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளன.


மேகம் கலையும் வரை காத்திருந்தால்தான் சூரியஒளியைக் காண முடியும். அதுபோல் அறியாமை அகலும் வரை பொறுமையாக பிரார்த்தனை செய்தால் தான் இறையருள் கிட்டும்.

ஒருவர் சேர்த்த செல்வம் வறுமைக் காலத்தில் பாதுகாப்புதரும். நாம் செய்த புண்ணியம் துன்பங்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும்.

# அதி நவீன போர் விமானங்களை கொள்வனவு செய்கிறது இந்தியா

## அதிர்ச்சியில் உறைகிறது சீனா

பிரான்சை சேர்ந்த பிரபல நிறுவனத்திடமிருந்து அதி நவீன ரக போர்விமானங்களை இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது சீனாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



பிரான்சைச்சேர்ந்த டஸ்ஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடமிருந்து ரூ.50 ஆயிரம் கோடி மதிப்பிலான 126 அதி நவீன டஸ்ஸால்ட் ரபேல் ரக போர் விமானங்களை இந்திய விமானப்படை கொள்வனவு செய்யவுள்ளது.

இந்தி விமானப்படை மிகப் பெரிய தொகைக்கு வெளிநாட்டுப் போர் விமானங்களை கொள்வனவு செய்ய விருப்பது இதுவே முதல் முறையாகும். மேலும் உலகின் மிகப் பெரிய பாதுகாப்பு கொள்முதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த பத்து ஆண்டுகளில் இந்த விமானங்கள் இந்தியாவுக்கு கையளிக்கப்படும். டஸ்ஸால்ட் ரபேல் போர் விமானங்கள் மிகவும் நவீனமானவை. இந்திய விமானப்படைக்கு இந்தப் போர் விமானங்கள் மிகப் பெரிய பலத்தை அளிக்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த நிதியாண்டில் இந்த ஒப்பந்தம் இறுதி வடிவம் பெற்று கையெழுத்தாகும். முதற்கட்டமாக 18 விமானங்களை டஸ்ஸால்ட் நிறுவனம் தயாரித்து வழங்கும். மீதமுள்ள 118 விமானங்களை இந்தியாவைச் சேர் ந்த ஒரு நிறுவனத்துடன் இணை ந்து டஸ்ஸால்ட் ஏவியேஷன் தயாரித்து அளிக்கம்.

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்பு இதே நிறுவனம்தான் மிராஜ் 2 ஆயிரம் விமானத்தை இந்தியாவுக்குக் கொடுத்தது. இந்தியாவின் மிகச் சிறந்த போர் விமானங்களில் ஒன்று மிராஜ் தா என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது டஸ்ஸால்ட் ரபேல் போர் விமானங்கள் இந்திய விமானப்படையில் சேரும்போது இந்திய விமானப்படையின் பலம் பலமடங்கு அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. (அ-2)

# கச்சதீவு அந்தோனியார் கொடியேற்றம் மார்ச் 2 இல்

(இராமேஸ்வரம்)

கச்சதீவு அந்தோனியார் கோயில் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் சிலுவைப் பாதை, தேர்பவனி, 4 ஆம் திகதி திருப்பலி மற்றும் கொடியிறக்கம் இடம்பெறும். யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், நெடுந்தீவு அருட்தந்தை அமல்ராஜ் ஆகியோர் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். திருவிழாவில் தமிழக பக்தர்கள் கலந்து கொள்ள வேண்டி யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரிடமிருந்து அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

விழாவில் பங்கேற்க இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உட்பட தமிழகத்தின் பல பகுகளில் இருந்து அதிகளவில் பக்தர்கள் இம்முறை செல்ல முடிவு செய்துள்ளனர். மூன்று நாட்கள் திருவிழா நடைபெற்றாலும் மார்ச் மாதம் 3,4 ஆம் திகதிகளில் மட்டுமே தமிழக பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். இதனால் மார்ச் 3 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து படகில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

இராமேஸ்வரம் வேர்கோடு அருட்தந்தை மைக்கில்ராஜ் கூறியதாவது, பக்தர்களுக்கு தேவையான உணவு , தண்ணீர் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. கச்சதீவுக்கு புனித பயணம் மேற்கொள்ளும் பக்தர்களின் போக்குவரத்துச் செலவை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

படகில் செல்லும் முன் பக்தர்களிடம் சோதனை செய்வதால் ஏற்படும் காலவிரையத்தை தவிர்க்க இந்திய கடலோர காவற்படையே பக்தர்களை சோதனை செய்து அவர்களது கப்பலில் ஏற்றிச்செல்ல வேண்டும் என்றார். (அ-2)


# சொத்துக் குவிப்பு வழக்கு தள்ளுபடி

(புதுடில்லி)

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கோரி மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இந்த வழக்கை விரைந்து முடிக்கும்படி கர்நாடக நீதிமன்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா முந்தைய ஆட்சியின் போது வருவாய்க்கு அதிகமாக சொத்துச் சேர்த்தது தொடர்பான வழக்கு தற்போது பெங்களூர் சிறப்பு நீதிமன்றில் நடக்கிறது. சுப்ரீம் நீதிமன்றில் இந்த மனு நீதிபதி தல்வீர் பண்டாரி தலைமையிலான பெஞ்ச் முன் நேற்று முன்தினம் விசா ரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கை விரைந்து முடிக்க சிறப்பு நீதிமன்றை கேட்டுக்கொண்டனர். (அ-2)



காக்கிநாடா துறைமுகம் செல்வதற்காக இராட்சத சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு மன்னார் வளைகுடா கடல் வழியாக பாம்பன் வந்த பார்ஜர் கப்பல் ரயில் பாலத்தை கடந்து செல்ல துறைமுக அதிகாரிகளின் அனுமதிக்காக பாம்பன் தென் கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந் ததைப் படத்தில் காணலாம்.

# தமிழ் இளைஞர்கள் காணாமல் போகின்றனர்; ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் தெரிய வந்தது

## எதிர்க்கட்சி துணைத் தலைவர் பண்ருட்டி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ் இளைஞர்கள் காணாமல் போகின்றனர் என்ற தகவல் இலங்கை அரசு அமைத்த குழுவின் மூலமே தெரியவந்துள்ளது. இந்தப் பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்கு தமிழக அரசு கொண்டு செல்ல வேண்டும் என எதிர்க்கட்சி துணைத் தலைவர் பண் ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் அவர் உரையாற்றியதாவது, மத்திய வெளியுறவு அமைச்சர் சமீபத்தில் இலங்கை சென்று வந்துள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பற்றி அவர் பேசியிருக்கிறார்.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அதிகளவில் காணாமல் போகின்றனர் என்றும் கடத்தப்படுகின்றனர் என்றும் சிறையில் அடைக்கப்படுகின்றனர் என்றும் தகவல் வந்துள்ளது. இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து அறிய இலங்கை அரசு அமைத்த குழுவே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சபாநாயகர் ஜெயக்குமார் ஆளுநர் உரையில் பேசுங்கள். எதை வேண்டுமானாலும் பேசலாம். பதில் சொல்வது, சொல்லாமல் இருப்பதற்கு அரசுக்கு உரிமை உண்டு.

போர் முடிந்ததும் கூட தமிழர்கள் உள்ள பகுதிகளில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் இன்னும் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும். இலங்கைத் தமிழர்கள் இன்னமும் அடிமைகளாகத்தான் உள்ளனர்.

இந்த நிலையை தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இந்த விவகாரத்தை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவாதம் நடந்துள்ளது. (அ-2)

# தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நடிகர் கமல் 15 இலட்சம் வழங்கினார்



தானே புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கான நிவாரண உதவியாக நடிகர் கமலஹாசன் ரூ.15 இலட்சம் வழங்கியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தமிழ்நாட்டின் கடற்கரை கிராமங்களை தானே புயல் புரட்டிப் போட்டது. தானே புயலால் தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். விவசாய நிலங்கள், வீடுகள் என்று அனைத்தும் புயலில் சிக்கி நாசமடைந்தன.

இந்நிலையில் தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தமிழகம் முழுவதும் உள்ள தொழிலதிபர்கள், திரையுலக நட்சத்திரங்கள் ஆகியோர் நிதி உதவி வழங்கி வருகின்றனர்.

தமிழ் திரையுலக உலக நாயகன் கமலஹாசன் இன்று ரூ.15 இலட்சத்திற்கான காசோலையை தமிழக முதல்வர் ஜெயலலிதாவிடம் வழங்கியுள்ளார். இதற்கு முன்பு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்தியாவுக்கு போர் விமானம் வழங்க பிரான்ஸ் முதலிடத்தில்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு போர் விமானங்களை வழங்குவதற்கு நடைபெற்ற ஒப்பந்த போட்டியில் அமெரிக்கா, ரஷ்யா, சுவீடன் நாடுகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு பிரான்ஸ் நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

இதனையடுத்து இந்தியா- பிரான்ஸ் நாடுகளிடையே முதன்முறையாக இராணுவ ரீதியிலான போர் விமான ஒப்பந்தத்தை செய்து கொள்ள உள்ளது. இந்திய பாதுகாப்புத் துறையில் விமானப்படையை நவீனமாக்கும் விதமாக அதி நவீன போர் விமானங்களை படையில் சேர்க்க முடிபு செய்யப்பட்டது.

இதனையடுத்து உலகளவிலான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது. இதில் மேற்கண்ட நாடுகள் அனைத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு பிரான்ஸ் நாடு முதலிடத்தை பிடித்துள்ளது. இதன்படி மொத்தம் 18 விமானங்களை வாங்குவதற்கு முடிபு செய்யப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தின்படி முதற் கட்டமாக சுமார் 18 விமானங்கள் எதிர்வரும் 2015 ஆண்டிற்குள்ளும் மீதமுள்ள விமானத்திற்கான தொழில்நுட்பங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு அதன்மூலமாக அடுத்த ஆறு ஆண்டிற்குள் தயாரிக்க முடிபு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 12 பில்லியன் டொலர் அளவிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கான ஒப்பந்த நடவடிக்கைகள் வரும் ஐந்து மாத காலத்திற்குள் முடியும் என பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி

## முதல் இருபது-20 போட்டி




தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

4டெஸ்ட் போட்டி தொடரில் இந்திய அணி அனைத்திலும் தோற்று 0:4 என்ற கணக்கில் தொடரை இழந்தது.

இந்திய–அவுஸ்திரேலிய அணிகள் இடையேயான இரண்டு இருபது-20 போட்டியில் முதலாட்டம் சிட்னியில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக வோர்னரும் வைட்டும் களம் இறங்கினார்கள்.

3.5 ஓவர்களில் அவுஸ்திரேலியா முதல் விக்கெட்டை இழந்தது. வோர்னர் 25 ஓட்டங்களில் வினேய் குமார் பந்தில் ரெய்னாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து 2ஆவது விக்கெட்டுக்கு வைட்டுடன் பிர்ட் ஜோடிசேர்ந்தார். வைட் அதிரடியாக விளையாடினார். ஆகையால் அவுஸ்திரேலிய ஓட்ட விகிதம் அதிகரித்தது.

10ஆவது ஓவர் கடைசிப்பந்தில் அவுஸ்திரேலியா இரண்டாவது விக்கெட்டையிழந் தது.

17 ஓட்டங்களை எடுத்திருந்த பீர்ட், அஸ்வின் பந்தில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து வைட்டுடன் ஹஸி ஜோடி சேர்ந்தார். அவுஸ்திரேலிய அணி 14.4 ஓவரில் 131 ஓட்டங்களை எடுத்திருக்கும் போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

அதன்பின்விளையாடிய அவுஸ்திரேலிய அணி குறிப்பிட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் 172 ஓட்டங்களை எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் இந்தியா 81 ஓட்டங்களுக்கு 6 முக்கிய விக்கெட்டை இழந்து தடுமாறியது.

அடுத்து அணித்தலைவர் தோனியும் அஸ்வினும் ஜோடி சேர்ந்தனர். இருவரும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.




ஆனால் அணியை வெற்றி நோக்கி அழைத்துச்செல்ல இயலவில்லை. 20 ஓவர் முடிவில் இந்தியா 140 ஓட்டங்களையே எடுத்தது.

தோனி 48 ஓட்டங்களையும் அஸ்வின் 15 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டத்தின் முடிவில் அவுஸ்திரேலியா 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந் நிலையில் இத் தொடரில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான இருபது-20 போட்டிநாளைமெல்போர்னில் நடைபெறவுள்ளது.

**முதல் போட்டி**

இதேவேளை அவுஸ்திரேலிய அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜோர்ஜ் பெய்லிக்கு இது தான் முதல் சர்வதேச ஆட்டம். அறிமுக ஆட்டத்தில் அணித்தலைவராக களமிறங்கும் 2ஆவது அவுஸ்திரேலிய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் தோனியுடன் இணைந்து விளையாடியுள்ள பெய்லி அதற்காக இந்த ஆட்டத்தை சாதாரணமாக எடுத்து கொள்ள மாட்டேன். ஆட்டத்தின் முடிவில் தோனியே என்னை பாராட்டும்படி செயல்படுவேன் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய டெஸ்ட் அணிக்கு புதிய தலைவர் விராட் ஹோலி




இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு விராட் ஹோலி புதிய அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என தெரிகிறது. டெஸ்ட் போட்டிகளில் ஏற்பட்டு வரும் தொடர் தோல்விகளால் இந்திய அணியின் தோனி மீது கடும் விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில் சேவாக் அல்லது ஹோலியை அணித்தலைவராக நியமிக்க கிரிக்கெட் சபை நிர்வாகிகள் ஆலோசனை செய்து வருகின்றனர்.


ஹோலியை அணித்தலைவராக நியமிக்க வேண்டும் என பி.சி.சி.ஐ. உறுப்பினர்கள் பலர் விரும்புவதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ. நிர்வாகி ஒருவர் கூறுகையில்,

அணித்தலைவரை நியமிக்கும் பணி தேர்வுக்குழுவினர் கையில்தான் உள்ளது. அணித்தலைவருக்கான பரிந்துரை பட்டியலை பி.சி.சி.ஐ. செயற்குழு அளிக்கும். தோனிக்கு தலைவர் பதவியை நீடிப்பதும் புதிய வீரரை தலைவராக கொண்டு வருவதும் தேர்வுக்குழுதான் முடிபு செய்ய வேண்டும்.

விராட் ஹோலி இளம் வீரர் என்று கூறுகிறார்கள். ஆனால் தோனி தலைவர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட போது அவரும் இளம் வீரராகத்தான் இருந்தார் என்றார்.

இந்த சூழ்நிலையில் வரும் 13ஆம் திகதி சென்னையில் பி.சி.சி.ஐ. செயற்குழு கூடுகிறது. இதில் இந்திய அணியின் தொடர் தோல்விகள் குறித்தும் புதிய அணித் தலைவரா அல்லது தோனியை நீடிக்க செய்வதா என்பது குறித்தும் ஆலோசிக்கப்படவுள்ளது.

# பதவி விலகத் தயார் தோனி அறிவிப்பு




வெளிநாட்டு மண்ணில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக 7 தோல்விகளைக் கண்டுள்ளதால் இந்திய அணித்தலைவர் தோனி கடுமையான விமர்சனத்துக் குள்ளாகி இருக்கிறார்.

இந்த நிலையில் வேறு திறமையான வீரர் இருந்தால் டெஸ்ட் அணித்தலைவர் பதவியில் இருந்து உடனடியாக விலகத் தயாராக இருப்பதாக தோனி திடீரென அறிவித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் கூறியதாவது, அணித்தலைவர் பதவி யாருக்கும் சொந்தமானது அல்ல. என்னைப் பொறுத்தவரை அது கூடுதல் பொறுப்பு மட்டுமே. அதில் எப்போதும் சிறப்பாக செயல்பட வேண்டும். என்பதே எனது விருப்பம். அதற்காக அந்த பொறுப்பில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று எண்ணியதில்லை.

திறமையான வீரர் யாராவது வந்தால் உடனடியாக பதவி விலகத் தயாராகவே இருக்கிறேன. அடுத்து வரும் இருபது-20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவோம் என நம்புகிறேன். இவ்வாறு தோனி கூறியுள்ளார்.

# காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கின் மின்சார, நீர்விநியோகம் துண்டிப்பு

காலி சர்வதேச கிரிக்கெட் அரங்கிற்கான மின்சார மற்றும் நீர்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக இம்மைதானத்தின் பராமரிப்பாளரும் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளருமான ஜயந்த வர்ணவீர கூறியுள்ளார்.

நீர் மற்றும் மின்சார விநியோகங்களுக்கான கட்டணங்கள் செலுத்தப்படாமையே இத்துண்டிப்பிற்கான காரணம். இலங்கை–இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி காலி அரங்கில் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எதிர்நோக்கும் நிதி நெருக்கடி காரணமாக ஒரு பிரச்சினை உள்ளது. இது தொடர்பாக நாம் இலங்கை கிரிக்கெட்டுடன் பேசியுள்ளோம். இப்பிரச்சினை செவ்வாய்கிழமை (நேற்று முன்தினம்) தீர்க்கப்படும் என நம்புகிறோம் என ஜயந்த வர்ணவீர பி.பி.சியிடம் கூறியுள்ளார்.

மார்ச் 26ஆம் திகதிக்கு முன் இம்மைதானத்தின் ஆடுகளத்தை தயார்படுத்துவது மிகக் கடினமாகும் என கிரிக்கெட் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இதற்கு ஒரு மாதகாலம் தேவைப்படாது. பொதுவாக டெஸ்ட் போட்டிகளுக்கான ஆடுகளத்தை 2-3 வாரங்களில் தயார்படுத்த முடியும் என ஜயந்த வர்ணவீர கூறியுள்ளார்.

கடந்த வருடம் அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியின்போது காலி ஆடுகளம் உரியதரத்தில் இல்லையென ஐ.சி.சி. தெரிவித்திருந்தது. இதற்காக சிறிலங்கா கிரிக்கெட் மன்னிப்பு கோரியமை குறிப்பிடத்தக்கது.

காலி மாநகர சபைக்கு சொந்தமான இந்த அரங்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் உபாலி தர்மதாச தலைமையிலான இடைக்கால நிர்வாகக் குழு கலைக்கப்படுவதற்கு முன்னர் காலி கிரிக்கெட் சங்கத்திற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம்34இலட்சம்ரூபாவையைவழங்கியிருந்தது.

இதில் 17 லட்சட் ரூபாய் நீர், மின்சார கட்டணங்களுக்கானதாகும். இந் நிலையில் இக் கட்டணங்கள் நிலுவையாக இருப்பதற்கு காரணம் என்னவென இலங்கை கிரிக்கெட் ஆராய்வதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

# இந்தியாவில் உலக கிண்ண கால்பந்து போட்டிகள்

17 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கிண்ண கால்பந்து போட்டி எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ளது.

இப் போட்டியை நடத்தும் உரிமை பெறுவதற்கான நடவடிக்கையில் இந்திய கால்பந்து சம்மேளனம் இறங்கியுள்ளது.

இந்த வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் இந்தியாவில் போட்டிகள் நடைபெறும். போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் இந்திய அணிவிளையாடுவதற்குதகுதி பெறும்.



ஒலிம்பிக் பெண்கள் தகுதி சுற்று கால்பந்து பைனலில் அமெரிக்க வீராங்கனைகள் அடித்த பந்தை, பாய்ந்து தடுக்க முயற்சித்த கனடா கோல்கீப்பர் எரின் மெகலாய்டு.

## ஐ.நாவில் இலங்கைக்கு...

காரியவசம் மற்றும் இராணுவ, கடற்படை, விமானப் படை அதிகாரிகளும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் இந்திய பாதுகாப்புக் கல்லூரிகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் இலங்கை படையினருக்கான பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட தற்போது உள்ள பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத்தின் போது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் கொழும்பில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வருடாந்தப் பாதுகாப்பு கலந்துரையாடலுக்கு புறம்பாக ஜெனிவாவில் இடம்பெறவிருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளால் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணை தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிரான இந்தப் பிரேரணையை இந்தியா ஆதரிக்கும் என செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அதுதொடர்பில் உண்மை நிலையை அறிந்து கொள்வதில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அதிக அளவு கரிசனை செலுத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கான சுயாதீனமான பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு மேற்கத்தேய நாடுகள் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

இந்நிலையில், இவ்விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வாஷிங்டனுக்கு அழைத்துள்ளார்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான விஷேட தூதுவர் ஸ்ரீபன் ரப் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஏற்கெனவே வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்)

(ந - 11)

## யாழ்ப்பாண...

மேற்படி தொகையுடன் குற்றப் பணமாக 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயும்; சம்பந்தப்பட்ட 27 பேரும் ஒட்டு மொத்தமாகச் செலுத்தினர். (ந-4)

## முன்னாள்...

அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் இரகசிய பொலிஸார் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டனர்.

இந்த கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் இவோன் பெனாண்டோ சந்தேக நபர்கள் 24 பேரையும் மார்ச் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-11)

# இலங்கையில் இந்தியா வீடு கட்டுகிறது; தமிழரின் உரிமை அங்கு பறிபோகிறது

## சட்டசபையில் தே.மு.தி.க.முழக்கம்

(சென்னை)

ஆளுநர் உரையில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை என விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழக ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பண்ருட்டி இராமச்சந்திரன் உரையாற்றினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கை சென்று அங்கு வீடுகள் கட்டும் திட்டத்துக்கு உதவிகளைச் செய்ததாக செய்திகளைப் பார்த்தோம்.

ஆனால், அங்குள்ள தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதாகவும், கடத்தப்படுவதாகவும், சிறையில் தள்ளப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

அது குறித்து ஆராய இலங்கை அரசே நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது. அந்தக்குழுவும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதையும், கடத்தப்படுவதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் 2 லட்சம் சிங்கள இராணுவத்தினர் உள்ளனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தமிழர்களின் பகுதிகள் இருப்பதால் தமிழர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவதில்லை.

மக்கள் அடிமைகளாக உள் ளனர். தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் மனிதாபிமான அடிப்படையில் வீடு கட்டித் தருவது உள்ளிட்ட பணிகளை இந்தியா மேற் கொள்கிறது.

ஆனால் தமிழர்களின் வாழ்வுரிமையையே பறிக்கும் செயல்தான் அங்கு நடக்கிறது. வெளியுறவு அமைச்சர் அல்லது அதிகாரிகள் முதல்வரைச் சந்திக்கும்போது இந்த நிலையை அவர்களிடம் எடுத்துக் கூற வேண்டும் என்றார் பண்ருட்டி ராமச்சந்திரன். (ந-11)

## விடுதலைப்...

உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரான மாத்தையா என்றழைக்கப்படும் கோபால சுவாமி மகேந்திர ராஜா இக்கட்சியின் தலைவராகவும் யோகரட்ணம் யோகி பொதுச் செயலாளராகவும் செயற்பட்டனர். இக்கட்சிக்கு புலி சின்னம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இக் கட்சி 1990இல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அரசியல் செயற்பாட்டில் இருந்து வாபஸ் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## போர்ப்...

யை ஆரம்பித்த இந்தியா, தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இப் பயிற் சிகளை நடத்தி வருகின்றது.

இலங்கை, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, புரூணை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் இந்தியக் கடற்படையுடன் இணைந்து இப்பயிற்சிகளில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (ந-11)

## புகையிரதப்...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஆறு மாதங்களுக்குள் இந்தப் புகையிரதப் பாதை அமைக்கும் பணிகள் முடிபடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு அடுத்த வருடம் புகையிரதப் போக்குவரத்து சேவை இடம்பெறும்.

நீண்டகாலம் யுத்தம் இடம் பெற்ற பிரதேசம் என்பதனால் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதனால் புகையிரதப் பாதைகள் அமைக்கும் பணி சற்று தாமதமாகலாம். இருப்பினும் அடுத்த வருடம் புகையிரதப் போக்குவரத்து இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## கைக்குண்டுடன் ஒருவர் கைது

வவுனியா - செட்டிக்குளம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு அருகில் வைத்து கைக்குண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் சிறையில் இருந்து தப்பிச் சென்றவர் என தெரிவிக்கப்படுகிறது.

செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-11)

**A/L பொருளியல்**

பொருளியல் அறிமுகம்,
பொது விலைமட்டம்,
சந்தைத் தோல்வி,
அரச தொழிற்பாடுகள்,
பொருளாதார ஒருங்கிணைப்புக்கள்,
பொருளாதார வளர்ச்சி,
புள்ளி விவரங்கள்,
நடைமுறை விடயங்கள்
மற்றும் நூல்கள்
விற்பனையாகின்றன. (7423)

ஆசிரியர் : வே. கருணாகரன்

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**பணிப்பெண்தேவை**

சமையல், வீட்டுவேலை தெரிந்த 25 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. காலை 7 மணிக்கு வந்து மாலை 5 மணிக்கு போகலாம்.

தொடர்பு : A.G. செல்வம்
107, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 0779107153 (7416)

**தவறிவிட்டது**

மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியினையுடைய சீ. பாலரமணன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன புத்தூர் சந்திக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: மானிப்பாய் வடக்கு, உச்சியோடை, மானிப்பாய்.

TP: 0775029237 (7415)

**தொழில் வேண்டுகை!**

நீங்கள் சந்தைப்படுத்தலில் முன்னோடியானவரா?
கவர்ச்சிகரமான வேதனப் பொதியுடன் எமது நிறுவனத்தில் வேலைவாய்ப்பு!

**Maxwell Marketing**
Ramalingam Rd,
Thirunelveli East, Jaffna.
T.P. : 0213202383 (7417)

**270 ஆவது நாள் நினைவஞ்சலி**

**அமரர் திருமதி சுசீலா வைகுந்தநாதன்**

**(ரீச்சர் அம்மா)**

திதி:-02.02.2012



எங்களுக்குச் சொல்லாமல் போய் விட்டீர்களே
எங்கள் சுசீலா அம்மாவே
ஒன்பது மாதங்கள் சென்று விட்டதே
உங்களை நினையாத நாளும் இல்லை
உங்களை மறந்தாலே உயிர் சொந்தமும் இல்லை
நீங்கள் போகும் போது சொல்லி விட்டு போவீர்கள்!
இப்ப நீங்கள் சொல்லாமலே போய்விட்டீர்களே
உங்களைக் காணவே நாங்கள் கவலையுடன்
பார்த்துக் கொண்டிருக்கின்றோம்

உங்கள் நினைவில் ஏங்கி நிற்கும்
கே. ஏ. வைகுந்தநாதன்
(இலங்கை சுதந்திரக்கட்சி அங்கத்தவரும் சமாதான நீதவானும், இலங்கை அரசசேவையில் ஓய்வு பெற்றவரும்)
மகன்: வை. நீதிராஜா
(கணக்காளர்)

துன்னாலை வடக்கு,
கரவெட்டி,
தொ.பே :- 021 4902987 (7382)

**மரண அறிவித்தல்**

**திருமதி பாவிலுப்பிள்ளை - திரேசம்மா(செல்லா)**



சில்லாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா பாவிலுப்பிள்ளை அவர்கள் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ், எலிசபேத் தம்பதிகளின் செல்ல மகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை பாவிலுப்பிள்ளையின் அருமை மனைவியும் மணி, றஞ்ஜினி, மலோ, காலஞ்சென்ற வசந்தன், விக்ரர், துரை, றெஜி, குணம், புனிதம் (ஆசிரியை மன்/பரிகாரிகண்டல் அ.த.க பாடசாலை) தரளம், செறின், சிறி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.02.2012 இன்று வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கதிரைமாதா ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்
சில்லாலை, பண்டத்தரிப்பு. (7419)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.